வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 28.01.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 28 பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



08
பாரதியின் கனவு மெய்ப்படும் காலம் நெருங்குகிறதா?



09
தேர்தல்களை இலக்கு வைக்கும் கருத்துச் சுதந்திர மரண மணி!



10
Leap Year : மிகுநாள் ஆண்டுகள் சுவாரஸ்யமான பாரம்பரியங்கள்!



11
சனத் நிசாந்தவின் அகால மரணமும் பொதுவெளியில் பிரதி பலிப்புக்களும்

# சர்ச்சைக்கு மத்தியில் தமிழரசின் பொதுச்செயலாளராக குகதாசன்

## தேசிய மாநாட்டை ஒத்திவைப்பதாக திடீரென்று அறிவித்தார் மாவை

திருமலை, ஜனவரி 28

**பல்வேறு குழப்பங்களுக்கு மத்தியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய பொதுச்செயலாளராக திருகோணமலையைச் சேர்ந்த சண்முகம் குகதாசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக சிவஞானம் சிறீதரன் கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில், தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத்தில் ஏனைய பதவிகளுக்கான தெரிவுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

திருகோணமலை, மூன்றாம் கட்டைப் பகுதியில் உள்ள தனியார் விருந்தகம் ஒன்றில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

முற்பகல் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது, தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகக் குழுவை நியமிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. 15



## நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை ஆராயவுள்ள சபாநாயகர் யாப்பா

கொழும்பு, ஜன. 28

அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய உள்ளடக்கப்பட்ட திருத்தங்கள் உரிய வகையில் சேர்க்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக ஆராயவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அனைத்து சட்டமூலங்களிலும் திருத்தங்களை உள்ளடக்கிய பின்னர் அவை உரிய வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்ந்து ஏதேனும் குறைபாடுகள் காணப்படின், அவற்றை 15

## ஒப்பந்தக் கொலைகளில் ஈடுபடும் இராணுவத்தினர்?

### பொலிஸ் விசாரணையில் பரபரப்பு தகவல்

கொழும்பு, ஜன. 28

பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்புடைய குற்றச் செயல்களில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பலர் செயற்படுவதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் சமீபகாலமாக நடந்த பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்பதும் 15

## அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து

கொழும்பு, ஜன. 28

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த கொள்கலன் பாரவூர்தி ஒன்று கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 118 ஆவது கிலோமீற்றருக்கு அருகில் இந்த விபத்து 15

## சுதந்திர தினத்தை கரி நாளாக பிரகடனப்படுத்தி கிழக்கில் பேரணி

### ஆதரவு வழங்குமாறு கோரிக்கை

மட்டக்களப்பு ஜன. 28

இலங்கையின் சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிக்குமாறு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் அன்றைய தினம் முன்னெடுக்கப்படும் அமைதி வழி போராட்டத்திற்கும் ஆதரவு வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏற்கனவே, இலங்கையின் சுதந்திர தினத்தை யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கரி நாளாக பிரகடனப்படுத்தி உள்ள நிலையில் அதற்கு ஆதரவாக கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கமும் ஆதரவு 15

## அதிகளவான எம்.பிக்கள் புதிய கூட்டணிக்கு ஆதரவு!

### நேற்று அறிவித்தார் நிமல் லான்சா

கொழும்பு, ஜன. 28

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் அதிக எண்ணிக்கையிலான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஐக்கியத்தின் மூலம் புதிய கூட்டணி அமைக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

ஜா - எலவில் புதிய கூட்டணியினால் நேற்று இடம் பெற்ற முதலாவது பொதுக்கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 15

## 'பெட்டகம்' ஆவண சேகரிப்பு மையம் குப்பிளானின் நேற்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன. 28

குப்பிளானில் நேற்று ஆவண சேகரிப்பு நிலையம் ஒன்று சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொருளியல் ஆய்வாளர் செல்வின் இரேனியஸ் தலைமையில் காலை 10:30 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் முதல் நிகழ்வாக 'பெட்டகம்' ஆவண சேகரிப்பு மையத்தை சம்பிரதாய பூர்வமாக வேலன் சுவாமிகள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல் துறை தலைவர் பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சமூக விஞ்ஞான ஆய்வு மைய்ய இயக்குநர் சி.அ. ஜோதிலிங்கம், பொருளியல் ஆய்வாளர் செல்வின் ஆகியோர் இணைந்து திறந்துவைத்தனர்.

அதனை தொடர்ந்து மங்கல சுடர்கள் ஏற்றப்பட்டன.

தொடர்ந்து பெயர்ப் பலகையினை கலைத்துறை பீடாதிபதி எஸ். 15

## ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அதிகபட்ச தண்டனை

### அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 28

"விசாரணையின் முடிவில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும், ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமானவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் அவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படும்" என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் நேற்று இடம்பெற்றுள்ள சமூக பொலிஸ் குழுக்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செயலமர்வு ஒன்றிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்.

"நான் இந்த அமைச்சைப் பொறுப்பேற்றதும், நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை குறுகிய காலத்தில் கட்டுப்படுத்தும் சவாலை எங்களால் சமாளிக்க முடிந்தது. அதன் பின்னர், போதைப் பொருள் மற்றும் பாதாள உலகக் குற்றங்களில் 15

## இப்படியும் நடக்கிறது

தமிழரசு கட்சியின் தலைவராக சிவஞானம் சிறிதரன் தெரிவு செய்யப்பட்ட போதிலும் பதவியேற்க முடியாத நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கின்றதோ என்ற எண்ணவைத்திருக்கிறது நேற்று நடைபெற்ற சம்பவங்கள்.

கட்சித் தலைவர் பதவி தெரிவு என்பது இதுகாலம்வரை தேர்தல் இல்லாமலே நடந்து வந்திருக்கின்றது.

இந்தப் பாரம்பரியத்தை 'தகர்க்க' வேண்டாம் என்று பொதுச்சபைக் கூட்டத்திற்கு முன்னர் சம்பந்தன் ஐயா வீட்டில் நடைபெற்ற கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், பதவிக்காக முன்மொழியப்பட்டிருந்த மூவரும் மறுநாள் சிறிதரனின் கொழும்பு இல்லத்தில் கூடி, தேர்தலில் சந்திக்க முடிவெடுத்திருந்த போது, கட்சியின் பாரம்பரியம் தகர்க்கப்பட்டிருந்தது.

அதற்கு காரணம், போட்டியில் இருந்தது மூவர் என்றாலும் அவர்களில் இருவரே உண்மையான போட்டியில் இருந்ததும், அவர்கள் இருவரும் தத்தம் வெற்றியில் அதீத நம்பிக்கை கொண்டிருந்ததும்தான்.

ஆனால் கடந்த இருபத்தியோராம் திகதி நடைபெற்ற அந்தத் தேர்தல் தமிழரசின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியதுடன், அதில் ஒருவர் வெற்றிபெற்றார்.

அவர் வெற்றிபெற்றால் இவர் என்ன செய்வார், இவர் வெற்றி பெற்றால் அவர் என்ன செய்வார் என்றெல்லாம் பலர் ஆருடம் சொல்லிக் கொண்டிருந்தபோதிலும் அப்படி எதுவுமே நடக்காது என்பதிலும், இவருவருமே ஒரு கட்டத்தில் ஒற்றுமையாகி கட்சியைக் கொண்டு நடத்துவார்கள் என்பதிலும் இந்த ஊர்க்குருவிக்கு நம்பிக்கை இருந்தது.

அதனையே அந்தத் தேர்தல் நடந்து முடிந்து, பின்னர் நேற்று நடைபெறவிருந்த அடுத்தடுத்த பதவிகளுக்கான தேர்தலில் இருதரப்பும் பரபஸ்பரம் விட்டுக் கொடுப்புக்களுடன் நடந்து கொள்ளவேண்டும் என்று கட்சியின் பெருந்தலைவரிலிருந்து கட்சி நலனில் அக்கறையுள்ள தரப்புகள் அனைத்துமே இருதரப்புடனும் தொடர்பு கொண்டு கேட்டுக்கொண்டதாக, இருதரப்புடனும் நெருக்கமான தொடர்பில் உள்ள ஊடக நண்பர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

அதிலும் குறிப்பாக, தான் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் உடனடியாகவே மீண்டும் இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டுக்கு முந்திய கூட்டமைப்பு போல அனைத்துக்கட்சிகளும் ஒன்றுமையுடன் இணைந்து செயல்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார் சிறிதரன் அவர்கள்.

அவருடன் தொடர்பு கொண்ட நெருக்கமான பலரும், உங்கள் கட்சிக்கு வெளியே இருக்கின்ற கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு முன்னதாக உங்கள் கட்சியை ஒற்றுமையாக கொண்டு செல்வதற்கு முயற்சி செய்யுங்கள் என்று அறிவுரை கூறியதாகவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

இந்த நிலையிலேயே நேற்று நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் பதவிக்கு சுமந்திரன் முன்மொழிந்திருந்த திருகோணமலை மாவட்டத் தலைவர் குகதாசன் தெரிவாவதை சிறிதரன் அமைதியாக ஏற்றுக்கொண்டிருந்தார் எனவும் ஆனால் அது பின்னர் பொதுச்சபைக்கூட்டத்தில் எற்றுக்கொள்ளப்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டபோது அங்கு நிலவிய குழப்ப நிலைகளுக்கு பின்னர், மத்திய குழுவின் முடிவை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்று பொதுச்சபையின் முடிவை அறிவதற்காக தேர்தல் நடைபெற்றிருக்கின்றது. இந்தத் தேர்தலில் மத்திய குழுவின் முடிவை ஏற்றுக் கொள்வதற்கு ஆதரவாக அதிகளவானோர் வாக்களித்த நிலையில் அந்தத் தெரிவுகளை அப்படியே ஏற்றுக்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

பொதுச்சபையில் நிலவிய குழப்பங்களுக்கு இடையே அதன் உறுப்பினரும் ஊடகவியலாளருமான திருமலை க.நவம் அவர்கள் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் அங்கிருந்த எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

திருமலை நவம் திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பொதுச்சபையில் இடம்பெற்றிருந்தவர். அவர் இப்போது பொதுச்செயலாளராக தெரிவாகியிருக்கும் குகதாசனின் எதிரணியில் இருப்பவர் என்பது கவனிக்க வேண்டியது.

அவர் தாக்கப்பட்ட செய்தியை சமூகவலைத்தளத்தில் பதிவுசெய்திருந்த சிலர், ஒரு ஊடகர் தாக்கப்பட்டிருக்கிறார் என்றும், ஏன் மற்றைய ஊடகவியலாளர்கள் அதற்கு கண்டனம் தெரிவிக்கவில்லை என்றும் கருத்திட்டுவருவதை காணமுடிந்தது.

அவர் ஊடகராக இருந்தாலும் அவர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டமை, ஓர் ஊடகவியலாளராக இல்லை. அவர் கட்சியின் பிரதிநிதியாக கலந்து கொண்டபோது நடந்த சம்பவத்திற்காக கண்டனம் தெரிவிப்பது அவசியமற்றது என்று ஊடகவியலாளர்கள் கருதியிருக்கலாம்.

நேற்றைய பொதுச்சபைக் கூட்டத்தின் பின்னர் திடீரென்று ஊடகர் மத்தியில் தோன்றிய முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசா, எதுவித விவரமும் இன்றி இன்று நடைபெறவிருந்த மாநாட்டை ஒத்திவைப்பதாக அறிவித்து விட்டு அங்கிருந்து வெளியேறியிருக்கின்றார்.

மாநாடு நடைபெறுவம்வரை தான் தலைவராக தொடரலாம் என்ற நம்பிக்கையோ தெரியவில்லை. ஆசை யாரைத்தான் விட்டுவைக்கின்றது. அதுவும் கொஞ்சம் வயதாகிவிட்டால் அது அதிகமாகியும் விடுகின்றதோ தெரியவில்லை.

- ஊர்க்குருவி.

## கனடாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி 6 கோடி ரூபாவை மோசடி செய்த பெண் கைது!

கொழும்பு, ஜன. 28

கனடாவில் தொழில் பெற்றுத் தருவதாக தெரிவித்து 6 கோடி ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்த பெண் ஒருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொடை மீன் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவர், கனடாவில் தொழில் பெற்றுக்கொள்வதற்காக வத்தளை குடா ஏதண்ட வீதியில் வசிக்கும் பெண் ஒருவருக்கு பணம் வழங்கியுள்ளார்.

பின்னர் தொழிலை பெற்றுக்கொடுக்க முடியாமல் போனதாக குறித்த பெண்ணால் தெரிவிக்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட நபரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டிற்கு அமைவாக விசாரணை அதிகாரிகளால் 37 வயதான பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுவரையில் குறித்த பெண்ணுக்கு எதிராக 16 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், முறைப்பாடுகளின் பிரகாரம் அவர் மோசடி செய்த பணத்தின் தொகை 6 கோடி ரூபாவுக்கும் அதிகமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வங்கி உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள் மற்றும் உயர் தொழில்களில் உள்ளவர்கள் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நபர்களிடம் குறித்த பெண் மோசடி செய்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி கனேடிய தொழில்வாய்ப்புகளை பெற்றுத்தருவதாகக் கூறிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட குறித்த பெண் வெலிசர நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(அ)

## சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியை இன்று

கொழும்பு, ஜன. 28

கொழும்பு - கட்டுநாயக்க நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்த நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பூதவுடல் இன்று ராஜகடலுவில் உள்ள ரோமன் கத்தோலிக்க மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது.

தற்போது அரச அமைச்சரின் சடலம் ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் கட்டப்பட்டுள்ள தற்காலிக மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நேற்றுமுன்தினம் உடல் கொண்டு வரப்பட்டது முதல், அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த ஏராளமான அரசியல்வாதிகள், நண்பர்கள் மற்றும் பொது மக்கள் வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

இதேவேளை, இந்த வாகன விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரியின் இறுதிக் கிரியைகள் கண்டி 'ஹதெனிய' மரவணகொட பொது மயானத்தில் நேற்று இடம்பெற்றன.

(அ)

## அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ரூ.50 ஆயிரம் பரிசு பெறும் இலங்கை எழுத்தாளர்கள்

கொழும்பு, ஜன. 28

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக நடத்திவரும் வருடாந்த இலக்கியப்போட்டியில் இம்முறை, 2022 ஆம் ஆண்டில் வெளியான நூல்களிலிருந்து நடுவர்களின் மதிப்பீட்டின் மூலம் சிறந்தனவற்றை பரிசுக்குத் தெரிவு செய்துள்ளது.

சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை முதலான நான்கு துறைகளில் 2022 ஆம் ஆண்டு வெளியான இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் இந்தத் தெரிவுக்காக ஊடகங்களின் வாயிலாக கோரப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட போட்டி தொடர்பான அறிவித்தலை வெளியிட்ட இலங்கை மற்றும் புகலிட தேசத்து ஊடகங்களுக்கும் இந்தப் போட்டிக்கு சங்கத்தின் போட்டி விதிமுறையின் பிரகாரம் நூல்களை தபாலில் அனுப்பி வைத்த எழுத்தாளர்களுக்கும் சங்கத்தின் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

போட்டி விதிமுறைகளுக்கு ஏற்றவாறு இம்முறை, கட்டுரை இலக்கியத்துறையில் நூல்கள் எவையும் சங்கத்திற்கு கிடைக்கப்பெறவில்லை.

சிறுகதைத்துறையில் நான்கு நூல்களும், நாவல் இலக்கியத் துறையில் மூன்று நூல்களும், கவிதை இலக்கியத்துறையில் நான்கு நூல்களும் இம்முறை இந்தப் போட்டிக்காக கிடைக்கப்பெற்றன.

இவற்றுள் சிறந்த நூல்களாக ஒரு சிறுகதைத் தொகுப்பும், ஒரு நாவலும், ஒரு கவிதைத் தொகுப்பும் தெரிவாகியுள்ளன.

இவற்றுக்கு இலங்கை நாணயத்தில் தலா ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

1. வல்லமை தாராயோ - (சிறுகதைத் தொகுப்பு) - எழுதியவர் : மாத்தளை வடிவேலன்
2. வேராகிப்போன மனிதர்கள் - (நாவல் ) - எழுதியவர்: ஏ.எஸ். உபைத்துல்லா.
3. கடிகாரப் பறவைகள் - ( கவிதை ) - எழுதியவர்: திருக்கோவில் கார்த்திகேசு.

(அ)

## ரூ. 500 கோடி மோசடி செய்த பிரமிட் சூத்திரதாரி சிக்கினார்!

கொழும்பு, ஜன. 28

பிரமிட் திட்டத்தின் கீழ் 500 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்தார் எனக் கூறப்படும் நபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மூன்று வருடங்களாக தலைமறைவாகியிருந்த நிலையிலேயே, பிலிமத்தலாவ பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஒரு பட்டதாரி என்பதுடன் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். அத்துடன், தென்மாகாணத்தில் உள்ள விகாரையொன்றில் உயர் பதவியையும் வகித்துள்ளார் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தொலைக்காட்சி நடிகை ஒருவருடன் முறையற்ற தொடர்பு வைத்திருந்ததாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவரது பிரமிட் வியாபாரத்தில் எவரேனும் முதலீடு செய்திருந்தால் முறையிடலாம் எனவும், இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## வாய்க்காலுக்குள் பாய்ந்த பேருந்து!

கிளிநொச்சி, ஜன. 28

கிளிநொச்சியில் தனியார் பேருந்து ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து, மின் கம்பத்தை முறித்துக் கொண்டு வாய்க்காலுக்குள் பாய்ந்துள்ளது.

கண்டாவளை பகுதியில் நேற்று இந்த சம்பவம் நடந்தது.

தனியார் பஸ் ஒன்று வேக கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த மின் கம்பத்தை உடைத்துக் கொண்டு காவாய்க்காலுக்குள் பாய்ந்தது. இந்த விபத்தில் யாருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. (அ)

ஈழநாடு



# சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணிக்கு தலைவர் சந்திரிகா!

## கலந்துரையாடல்கள் மும்முரம்

கொழும்பு, ஜன. 28

சுதந்திரக் கட்சியினால் அமைக்கப்படவுள்ள புதிய கூட்டணியின் தலைமைத்துவத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சியின் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

பதவியை ஏற்க சந்திரிகா விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையில் புதிய கூட்டணி அமைப்பதற்கான ஆரம்ப கட்ட பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளுடன் பல கலந்துரையாடல்கள் நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய கூட்டணியின் தலைமைக்கு தனியாக முடிவெடுக்கும் அதிகாரம் வழங்கப்படாது, சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் கூட்டணியில் இணையும் ஏனைய கட்சிகளின் தலைவர்களை உள்ளடக்கிய தலைமைத்துவ சபையொன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த சபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 50 வீத பெரும்பான்மை பங்குகளை வைத்திருக்கும், அதனுடன் இணையும் ஏனைய கட்சிகளுக்கு 50 வீத அதிகாரத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டணிக்கு வெற்றிலை சின்னம் அல்லது நாற்காலி சின்னம் தேர்வு செய்யப்படவுள்ளதாகவும், அது குறித்து விவாதித்து முடிவெடுக்க தயாராக இருப்பதாகவும் கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட புதிய கூட்டமைப்பு தனது முதலாவது சந்திப்பின் பின்னர் சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜனதா விமுக்தி பெரமுனவின் பழைய சித்தாந்தம் கொண்ட பல குழுக்களும் சுதந்திரக் கட்சியின் புதிய கூட்டணியில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், பேச்சுவார்த்தைகள் முடிந்தவுடன் புதிய கூட்டணியின் முக்கிய கூட்டத்தை கொழும்பில் நடத்த முன்மொழியப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவி தொடர்பில் திலங்க சுமதிபால மற்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோர் இன்னும் உறுதியான இணக்கப்பாட்டுக்கு வரவில்லை எனவும், உடனடியாக முடிவெடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருவருக்கும் அறிவித்துள்ளார். அந்த பிரச்னைக்கு தீர்வு கிடைத்தவுடன், புதிய கூட்டணிக்கு பயன்படுத்தப்படும் சின்னம் குறித்து உடன்பாடு எட்டப்படும். (அ)

# 12 இந்திய மீனவர்கள் நிபந்தனையுடன் விடுவிப்பு

கொழும்பு, ஜன. 28

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட12 இந்திய மீனவர்களும் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் பன்னிருவரையும் ஊர்காவற்றுறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் முன்னிலைப்படுத்தினர்.

மீனவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கும், தலா ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை என்ற ரீதியில், ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை விதித்து நீதவான் உத்தரவிட்டார்.

காரைநகர் கடற்பரப்பில் 3 மீன்பிடி படகுகளுடன் மீனவர்கள் பன்னிருவரும் கடந்த 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

தமிழ்நாடு, புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்களே கைது செய்யப்பட்டனர்.

குற்றம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் ஒரு படகின் உரிமையாளர் படகில் பயணித்துள்ளமையால், படகை பறிமுதல் செய்து நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

ஏனைய இரண்டு படகுகளின் உரிமையாளர்களும் படகில் இருக்காத காரணத்தால், அவர்களை முதலாவது சந்தேகநபராகக் கருதி வெளிவிவகார அமைச்சினூடாக அவர்களுக்கு அழைப்பாணை அனுப்புமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த இரண்டு மீன்பிடி படகுகள் தொடர்பான உரிமை கோரல் வழக்கு மார்ச் மாதம் 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமெனவும் நீதவான் அறிவித்துள்ளார். (அ)

# 120 மெகாவோட் மின்சாரத்தை பெப்ரவரியில் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்க திட்டம்!

கொழும்பு, ஜன. 28

பெப்ரவரியில்உமாஓயா திட்டத்தின் கீழ் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியிலிருந்து 120 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் 31 நீர்த் தேக்கங்கள் மூலம் நீரில் மிதக்கும் சோலார் பேனல்களைப் பயன்படுத்தி 3,077 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின்கட்டமைப்பில்



இணைக்க முடியும் எனவும் இதற்குப் பொருத்தமான நீர்த்தேக்கங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் ஊடாக தேசிய உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிப்பதையே, 2024 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன அமைச்சு முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக பல பாரிய பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதில் பெரும்பாலான திட்டங்கள் வெளிநாட்டுக் கடன்களின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

அந்தவகையில் ஆரம்பிக்கப்பட்ட உமாஓயா திட்டத்தின் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

எனவே, பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்குள் 120 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் சஷீந்திர தெரிவித்துள்ளார். (அ)



# கிளிநொச்சியில் கஞ்சாவுடன் சிக்கிய நபர்!

கிளிநொச்சி, ஜன. 28

கிளிநொச்சியில் 4 கிலோகிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து கஞ்சா கடத்தி செல்லப்படுவது தொடர்பில் இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது. சம்பவம் தொடர்பில் விசேட அதிரடிப் படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

புலனாய்வு பிரிவினரும், கிளிநொச்சி விசேட அதிரடிப் படையினரும் அவர்களது புலனாய்வு பிரிவினரும் போதைப் பொருள் கொண்டு சென்ற வாகனத்தை பின் தொடர்ந்த நிலையில், வாகனம் முறிகண்டி பகுதியில் உள்ள வசந்தநகர் பிரதான வீதியில் திரும்பியுள்ளது.

வாகனத்தை இடை மறித்து சோதனையிட்ட வேளை சாரதி உள்ளிட்ட இருவர் தப்பி சென்ற நிலையில், வாகனத்தில் இருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து விசேட அதிரடிப்படையினர் வாகனத்தை சோதனையிட்ட போது, நூட்சுமமாக மறைத்து எடுத்து செல்லப்பட்ட இரண்டு கஞ்சா பொதிகளை மீட்டுள்ளனர்.

குறித்த பொதியில் காணப்பட்ட கஞ்சா சுமார் 4 கிலோவிற்கு அதிக எடை கொண்டது என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த கஞ்சா பொதியையும், கடத்த பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும், கைதான சந்தேகநபரையும் மாங்குளம் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதுடன், மேற்கொண்டு விசாரணைகள் இடம்பெற்று வருகிறது.

தப்பி சென்ற இரு சந்தேக நபர்களையும் கைது செய்யும் நடவடிக்கையில் கூட்டாக ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# பௌத்த மத அவமதிப்பு: தேரர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 28

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் இணையத்தில் பதிவொன்றை வெளியிட்ட தேரர் ஒருவர் கணினி குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது பதிவு பௌத்த மதத்தை அவமதிப்பதாக காணப்பட்டதனையடுத்தே இவர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

விஹாராதிபதி ஒருவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்ததாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிரான மனுக்களின் மீது விரைவில் மேலதிக விசாரணை

கொழும்பு, ஜன. 28

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான மேலதிக விசாரணையை எதிர்வரும் 31 ஆம் திகதி மற்றும் பெப்ரவரி முதலாம் திகதிகளில் முன்னெடுப்பதற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, நவாஸ், ஷிரான் குணரத்ன,அர்ஜுன ஒபே சேகர உள்ளிட்ட ஐவரடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலை யில் இந்த மனுக்கள் மீதான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யுத்தம் நிறைவடைந்து பல வருடங்கள் கடந்துள்ள நிலையில், புதிய பயங்கரவாத அமைப்பொன்று மீண்டும் உருவாகும் என கருதக்கூடிய சூழல் காணப்படாத பின்னணியில், இவ்வாறான சட்டமூலத்தின் ஊடாக எதிர் கருத்துகளை ஒடுக்குவதற்கே அரசாங்கம் முயற்சிப்பதாக, மனுதாரர்களின் சார்பில் விடயங்களை முன்வைத்த சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இலங்கை நாடு, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என அடையாளப்படுத்தப்படுவதன் காரணமாக, மக்களை பாதுகாத்தல், அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் ஆகியன அரசியலமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அரசாங்கத்தின் தூரநோக்கற்ற செயற்பாடுகளுக்கு எதிராக குரலெழுப்பும் மக்களை ஒடுக்குவதற்கு இந்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில உட்பிரிவுகள், பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலமாக மாத்திரமின்றி, சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும் என சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது நீதிமன்றத்திடமே காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், ஜனாதிபதி சட்டத்தரணி நய்ஜல் ஹெட்டி, ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், சிரேஷ்ட சட்டத்தரணி லக்ஷான் டயஸ், சட்டத்தரணி தனுக நந்தசிறி, சிரேஷ்ட சட்டத்தரணி ஷாந்த ஜயவர்தன உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாத்தினர் மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தனர். (அ)

# புதிய சட்டத்தினால் மேற்குலகம் கவலை

## கனடா, பிரித்தானியா கடும் எதிர்ப்பு

**கொழும்பு, ஜன. 28**

**சர்வதேச நாடுகளும் அரசாங்கத்தின் இலங்கையின் நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் கவலைகளை வெளியிட்டு வருகின்றன.**

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஆண்ட்ரூ பேட்ரிக்,

"இலங்கையின் நிகழ்நிலை காப்புச் சட்டம் பொருளாதார மீட்சிக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் ஜனநாயக சமூகத்தில் எதிர்பார்க்கப்படும் நியாயமான உரையாடலைக் கட்டுப்படுத்தும் சாத்தியம் உள்ளது." என தமது எக்ஸ் தளத்தில் கவலை வெளியிட்டுள்ளார்.

"நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பான பாராளுமன்ற நடவடிக்கைகளை உன்னிப்பாக கனடா அவதானித்து வருகிறது. கருத்து சுதந்திரம் மற்றும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் அதன் தாக்கம் குறித்து சிவில் சமூகம் மற்றும் தொழில்துறை கவலைகளை நாம் அவதானித்துள்ளோம். இரண்டையும் பாதுகாக்கும் வகையில் இது செயல்படுத்தப்படுவது முக்கியம்." என இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ் தெரிவித்துள்ளார்.

மேலும் பல நாடுகள் அரசாங்கத்தின் இந்தச்சட்டமூலம் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ளமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

(அ)

# ரொஷான் ரணசிங்க அணியிலும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள்

கொழும்பு, ஜன. 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க அணியில் பலர் தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் ரொஷான் ரணசிங்கவின் புதிய அரசியல் அணியுடன் இணைந்து செயற்படும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், பொதுஜன பெரமுண, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஏனைய கட்சிகளின் நேர்மையான அரசியல்வாதிகள் எங்கள் அணியில் இணைந்துள்ளனர்.

எங்களது அரசியல் முன்னணி மூலமாக தேர்தலில் முன்னிறுத்தப்படும் வேட்பாளர் உறுதியாக வெற்றி பெறுவார். அதற்காக தலைமைத்துவ மட்டத்தில் தற்போதைக்கு மூன்று பேர் தயாராக இருக்கின்றனர்- என்றார்.

ரொஷான் ரணசிங்க அணியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் யார் என்று ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பிய போது லலித் எல்லாவல நேரடியாக பதிலளிக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்காக மூன்று எழுத்தைக் கொண்ட பெயர் கொண்டவர்கள் மூவரும் நான்கு எழுத்தில் பெயர் கொண்ட ஒருவரும் தயாராக இருக்கின்றனர்.

நான்கு எழுத்தில் பெயர் கொண்டவர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினால் ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமன்றி தேசிய மக்கள் சக்தியும் அவரிடம் தோற்றுப் போகும் என்றும் லலித் எல்லாவல தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (அ)




கலை ஒளி முத்தையா பிள்ளை நினைவு அறக்கட்டளை சார்பில், மு. நித்தியானந்தன், எச். எச். விக்கிரமசிங்க ஆகியோர் தொகுத்த தெளிவத்தை ஜோசப்பின் 'தெளிவதை ஜோசப் கதைகள்' என்ற 59 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பை, இந்தியாவின் எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு, பதிப்பாசிரியர் இலங்கை கண்டியைச் சேர்ந்த அர்ஷா வழங்குவதையும், மருத்துவர் மற்றும் மக்கள் நல வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்ரமணியன், மூத்த பத்திரிகையாளர் 'இந்து' என். ராம் மற்றும் டாக்டர் மோகன் காமேஸ்வரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# சிதறி கிடக்கும் தலைமைத்துவத்தை சிறீதரனே ஒன்றிணைக்க வேண்டும்!

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

கொழும்பு, ஜன. 28

சிதறிக்கிடக்கும் தலைமைத்துவத்தை சிறீதரன் ஒன்றிணைக்க வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நிலத்திலும் புலம்பெயர் தேசத்திலும் கட்சிகள் மற்றும் அமைப்புக்களை ஒன்றிணைக்கும் காலப் பணியை அவர் ஆற்ற வேண்டும் என்றும் செயலூக்கமான நடவடிக்கை வாயிலாவே ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, முதற் தடவையாக கட்சித் தலைவர் தெரிவில் மக்கள் ஆட்சி முறையின் வாயிலாக தெரிவு இடம் பெறுவதும் வெற்றி பெறு வதும்தான் கட்சி மற்றும் அமைப்புக்கள் சார்ந்த ஜன நாயகத்தை வலுப்படுத்தி, நம் பிக்கையை ஏற்படுத்தும் என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தந்தை செல்வாவின் வழியில் சென்று கட்சியை புத்தெழுச்சி கொள்ளும் வகையில் அவரது பணி அமையுமென்பதில் எனக்கு அசைக்கவியலாத நம்பிக்கை உண்டு என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அதிபர்களுக்கு சம்பள உயர்வு உட்பட்ட 06 முக்கிய சலுகைகளுக்கு பரிந்துரை!

கொழும்பு, ஜன. 28

நாட்டில் அதிபர் சேவையில் நிலவும் சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவால் நியமிக்கப்பட்டுள்ள குழு, ஆறு பிரதான அம்சங்கள் அடங்கிய அதன் அறிக்கையை அமைச்சரிடம் கையளித்தது.

சம்பள திருத்தம் மற்றும் சம்பள முரண்பாடுகளை களைதல், அதிபர்களின் கொடுப்பனவை 6,000 ரூபாவிலிருந்து 15,000 ரூபாவாக அதிகரித்தல், அரசசேவை அதிகாரிகளுக்கு கிடைக்கும் தொடர்பாடல் பயணச் செலவு, வாகனம், வீடு உள்ளிட்ட கொடுப்பனவுகள் மற்றும் தூரப் பிரதேசங்களில் கடமையாற்றும் அதிபர்களுககான விசேட கொடுப்பனவு தொடர்பாக 6 முக்கிய விடயங்கள் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

தற்போது 16 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காணப்படும் அதிபர் சேவை தரம் III, II, Iஇற்கு உட்பட்ட அதிபர்கள், பிரதி அதிபர்கள் மற்றும் உப அதிபர்கள், சேவைகளை பாடசாலை கட்டமைப்பின் புதிய தேவைகளை கவனத்திற்கொண்டு அதிபர்களுக்கான அதி உயர் தரத்தை உருவாக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து, அதனூடாக சேவை யாப்பு திருத்தம் மூலம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், கல்வித்துறை அதிகாரிகளிடம் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(அ)

# மழை ஓய்ந்து ஒரு மாதம் கடந்தும் வீடுகளுக்கு திரும்ப முடியாத நிலையில் தேராவில் மக்கள்!

முல்லைத்தீவு, ஜன. 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதிகளில் வசிக்கும் மக்கள் கனமழை ஓய்ந்து ஒரு மாதம் கடந்தும் இன்றும் வீடுகளுக்கு திரும்ப முடியாத அவல நிலையில் சிக்கியுள்ளனர்.

குறித்த பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேராவில் குளத்தின் மேலதிக நீர் வெளியேறுவதற்கான வழிகள் மறிக்கப்பட்டதால் குளத்தின் நீர் நிரம்பியுள்ளது.

புதிய வீதி அமைக்கும்போது மேலதிக நீர் வீதியை குறுக்கறுத்து செல்வதற்கான பாலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் அமைக்காததன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சிறியவர்கள், முதியவர்கள் உள்ளடங்கலாக பாடசாலையில் வாழ்ந்து வரும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தேராவில் குளக்கரையினை அண்டிய 10ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

வீதிகளில் குளத்து நீர் நிரம்பி காணப்படுவதால் போக்குவரத்து செய்வதிலும் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

நீண்ட காலத்தின் பின்னர் கிடைத்த கன மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் குளத்தின் மேலதிக நீர் வெளியேற வழியில்லாததால் குளம் நிரம்பி புதிதாக அமைக்கப்பட்ட வீதியின் உயரம் வரை நீர் தேங்கி உள்ளது.

இதனால் குளத்தை அண்மித்த மக்களின் காணிகள், வீடுகள், வீதிகளுக்குள் குளத்து நீர் சென்றுள்ளதால் மக்கள் இன்று தங்கள் அன்றாட வாழ்வினை கொண்டு செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

தேராவில் கிராமத்திற்கு செல்லும் முதன்மை வீதி மற்றும் மூங்கிலாறு கிராமத்திற்குள் செல்லும் சிறு வீதிகள் இரண்டு, கோவில்கள் இரண்டு நீரில் மூழ்கியுள்ளன.

பாரிய மழைவெள்ளம் ஏற்பட்டு இன்று ஒரு மாதத்திற்கு மேலாக மக்கள் இவ்வாறான அவல வாழ்வினை வாழ்ந்து கொண்டிருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

(அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
28.01.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், தை 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தவறுகளின் நிழலில் தமிழரசு கட்சி!

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருக்கான போட்டியை தொடர்ந்து, கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பங்கள் தொடர்கின்றன. நேற்றையதினம் திருகோணமலையில் நடைபெற்ற பொதுச் செயலாளர் தெரிவின்போது, கட்சிக்குள் கைகலப்புகள் ஏற்படுகின்றளவிற்கு, குழப்பங்கள் தீவிரமடைந்திருக்கின்றன. தமிழ் தேசியத்தை பாதுகாக்கப் போவதாக முழக்கமிடும் ஒரு கட்சியினர், அதன் உள்ளக குழப்பங்களை சரிசெய்ய முடியாமல் தேசிய மகாநாட்டையே பிற்போடுமளவிற்கு, நிலைமைகள் சிக்கலடைந்திருகின்றன. தமிழரசு கட்சியின் தலைவரைப் பொறுத்தவரையில் இது அவரது முதல் பின்னடைவாக நோக்கப்படலாம் - ஏனெனில், அவரால் விடயங்களை தனது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் இருப்பதான தோற்றமே தெரிகின்றது.

இரா.சம்பந்தனின் தவறான தலைமைத்துவமே இவை அனைத்திற்குமான காரணமாகும். சம்பந்தன் தனது சொந்த மாவட்டத்திற்கான கட்சிக் கட்டமைப்பையும் சரியாக வழிநடத்தவில்லை - அதேவேளை தமிழரசுக் கட்சியின் எதிர்கால இருப்பிற்கான முறையான செயல்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை. சம்பந்தனின் தவறுகளே கட்சியை வழிநடத்திக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகவே தொடர்ந்தும் குழப்பங்களுக்குள் கட்சி சிக்கியிருக்கின்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கிய செல்வநாயகம் தனக்கு பின்னர் எவ்வாறான ஒருவரிடம் கட்சியை ஒப்படைக்க வேண்டும் என்பதில் தெளிவான பார்வையைக் கொண்டிருந்தார். இதன் காரணமாகவே அமிர்தலிங்கத்தின் தலைமையின் கீழ், கட்சி வந்தது. அமிர்தலிங்கத்தின் மறைவிற்கு பின்னர், சரியான தலைமைத்துவங்களால் கட்சி வழிநடத்தப்படவில்லை.

சம்பந்தன் தமிழரசு கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றது ஒரு விபத்து. அன்றைய சூழலில் ஒப்பீட்டடிப்படையில் ஒரு மூத்த தலைவராக இருந்த காரணத்தினால்தான், சம்பந்தனால் தலைமைக்கு வரமுடிந்தது. உண்மையில் அமிர்தலிங்கத்திற்கு பின்னர், தமிழரின் ஜனநாயக அரசியலை பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புக்களை சம்பந்தன் மேற்கொள்ளவில்லை. வெறுமனே ஒரு பார்வையாளராகவே இருந்தார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், பழம் நழுவி, பாலில் விழுந்த கதையாக, விடுதலைப் புலிகளினால் தமிழரசுக் கட்சி மீண்டும் மக்கள் மத்தியில் அறிமுகமானது. 2004 தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காக விடுதலைப் புலிகள் இயக்கம் நேரடியாகச் செயல்பட்டது. இதன் காரணமாகவே 22 ஆசனங்கள் கூட்டமைப்பிற்கு கிடைத்தன. சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவரானார்.

ஆனால், சம்பந்தனோ தனது பதவி நலனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வாகனமாகவே தமிழரசுக் கட்சியை பயன்படுத்தினார். இந்தப் பின்புலத்தில்தான் சம்பந்தனால் இயங்க முடியாத நிலைமை ஏற்பட்டபோது, கட்சிக்குள் தலைமைப் போட்டி உருவாகியது. சம்பந்தன் தனக்கு இயலுமான போதே, கட்சிக்கான தலைமைத்துவத்தை தீர்மானித்திருந்தால் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது.

இந்தப் பின்புலத்தில் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் எந்த அடிப்படையில் - அவர் கூறிவரும் தமிழ் தேசிய அரசியலை முன்னெடுக்கப் போகின்றார்?

# மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நேற்று ‘கறுப்பு ஜனவரி’ போராட்டம்



மட்டக்களப்பு, ஜன. 28

மட்டக்களப்பில் கறுப்பு ஜனவரியை முன்னிட்டு ஊடக அடக்குமுறைக்கு எதிராக கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி ஊடகவியலாளர்கள் நேற்று சனிக்கிழமை காந்தி பூங்கா முன்னால் கறுப்புப்பட்டி அணிந்து போரட்டம் முன்னெடுத்தனர்.

கறுப்பு ஜனவரியை முன்னிட்டு மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம், கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி நேற்று ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், ஊடகவியலாளர்கள், மதகுருமார், சமூகசேவைகள் செயற்பாட்டாளர்கள் வலிந்து காணாமல் போன உறவுகளின் சங்கம் உட்பட பலர் காந்தி பூங்காவின் முன்னால் ஒன்றிணைந்தனர்.

இதன்போது படுகொலை செய்யப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி பெற சர்வதேச விசாரணை வேண்டும், ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்து, படுகொலை செய்யப்பட்டு கடத்தப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி கொடு, எங்கே எங்கே ஊடகவியலாளர் எக்னெலிகொட எங்கே, நிகழ் நிலை காப்பு சட்டத்தை வாபஸ் பெறு போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு தலையில் கறுப்புப் பட்டி அணிந்து கோஷங்கள் எழுப்பியவாறு ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

# பாடசாலை மாணவர்களின் உணவுப் பணம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 28

பாடசாலை மாணவர் ஒருவரின் உணவுக்காக தற்போது வழங்கப்படும் 85 ரூபாவை 115 ரூபாவாக அதிகரிப்பது தொடர்பில் கல்வி அமைச்சினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலையில் பொருட்களின் விலை அதிகரிப்பு காணப்படுவதால் குறித்த தொகைக்குள் உணவை வழங்க முடியாது என தெரிவிக்கப்பட்டதற்கு அமைய இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இந்த தொகை அதிகரிப்பு தொடர்பான கலந்துரையாடல் அமைச்சில் இடம்பெற்றதுடன், இதில் நிதியமைச்சின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். ஒரு வேளை உணவுக்கு 115 ரூபா வழங்கினால் போதும் எனவும், சந்தையில் அரிசி, பருப்பு உள்ளிட்ட உலர் உணவுப் பொருட்களின் விலைகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு அடுத்த வாரம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் , இது வரை பத்து லட்சம் மாணவர்கள் மதிய உணவுத் திட்டத்தின் பலனைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சமுர்த்தி வங்கி கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிய அமைச்சர்


யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் - நெல்லியடி - கரவெட்டி பகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள சமுர்த்தி வங்கி கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக சமுர்த்தி அமைச்சர் அனுப பஸ்குவல் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், வடமராட்சி பிரதேச செயலர், யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தி முகாமையாளர், நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# பாகிஸ்தானில் அரசியல் சக்தியாக உருவெடுக்கப் போராடும் இந்துக்கள்?

தீர்த் சஜன் மேக்வார் பாகிஸ்தானின் சிந்த் மாகாணத்தின் உமர்கோட்டில் உள்ள துணை ஆணையர் அலுவலகத்திற்கு ஒரு சில ஆதரவாளர்களுடன் வந்தார். தங்களது வேட்பாளரை ஆதரிக்க ஆதவாளர்கள் கோஷங்களை எழுப்பினர்.

அலுவலகத்தில் கட்சியினர் படிவத்தைப் பூர்த்தி செய்து, உள்ளே சென்று அறிவிப்புப் பலகையில் உள்ள பட்டியலில் இருந்து தேர்தல் சின்னத்தைத் தேர்வு செய்தனர். தீர்த் தனக்கான சின்னமாகக் கரும்பலகையைத் தேர்ந்தெடுத்தார்.

தீர்த் இந்து மதத்தைச் சேர்ந்தவர். அவர் பிப்ரவரி 8ஆம் தேதி நடக்கவுள்ள பொதுத் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக உமர்கோட்டில் போட்டியிடுகிறார். உமர்கோட், இந்திய எல்லையில் இருந்து 60 கி.மீ. தொலைவில் சிந்த் மாகாணத்தின் கிழக்கில் இருக்கும் சிறிய புழுதி படிந்த சிற்றூர்.

பாகிஸ்தானின் தென் மாநிலமான சிந்த்-இல் தான் அந்நாட்டின் பெரும்பாலான இந்து மக்கள்தொகை இருக்கிறது. இஸ்லாமியர்கள் ஆதிக்கம் செலுத்தும் இந்நாட்டில் தீவிரவாதம் தலைதூக்கிய போதிலும், சிந்த் நகரத்தில் இந்துக்களின் சுவடுகளும் பாரம்பரியமும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூர் இந்து அரசரின் பெயரால் இந்நகரம் முன்பு அமர்கோட் என்று அழைக்கப்பட்டது. 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அமர்கோட்டின் கோட்டையில்தான் 1542ஆம் ஆண்டில் முகலாயப் பேரரசர் அக்பர் பிறந்தார்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பைத் தவிர, இந்நகரம் வேறொரு காரணத்திற்காக பாகிஸ்தானில் தனித்து நிற்கிறது. பாகிஸ்தானில் இன்னமும் இந்துக்கள் பெரும்பான்மையாக இருப்பது இந்த மாநிலத்தில்தான்.

இந்தியா பாகிஸ்தான் பிரிவின்போது, சிந்த் மாகாணத்தின் மக்கள் தொகையில் 80 வீதம் இந்துக்கள் வசித்து வந்தனர் என உள்ளூர்வாசிகள் கூறுகின்றனர். ஆனால், அதிக வசதி கொண்ட உயர் சாதியைச் சேர்ந்த தாக்கூர்கள், அடுத்தடுத்த ஆண்டுகளில் படிப்படியாக இந்தியாவிற்குக் குடிபெயர்ந்தனர்.

அதே நேரத்தில் இடம்பெயர வழி இல்லாத பட்டியலினத்தவர்கள் மட்டும் இங்கு தங்கினர். இப்போது நகரத்தில் உள்ள இந்து சமூகத்தில் 90 வீதத்திற்கும் அதிகமானோர் பட்டியல் சாதியைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

அவர்களுள் ஒருவர்தான், தீர்த் மேக்வார். பட்டியலினத்தைச் சேர்ந்த இந்துக்கள் இங்கு அதிக எண்ணிக்கை



யில் இருந்தாலும், அவர்கள் அரசியல் அமைப்பில் உரிய பிரதிநிதித்துவத்தைப் பெறவில்லை என்றும், இந்த ஒழுங்கின்மைக்கு செல்வாக்கு மிக்க உயர் சாதி மக்கள் தான் பொறுப்பு என்றும் தீர்த் கூறுகிறார்.

“அதிகாரத்தால் மட்டுமே இங்கு மாற்றம் கொண்டு வர முடியும். எனவே, சமச்சீரற்ற நிலையைச் சரிசெய்து எனது சமூகத்தை மேம்படுத்துவதற்காகத்தான் இந்தட்ப தேர்தலில் போட்டியிட முடிவு செய்திருக்கிறேன். பல



ஆண்டுகளாக முக்கிய அரசியல் கட்சிகள், எங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளைச் செல்வாக்குமிக்க நில உரிமையாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் உயர் சாதியைச் சேர்ந்தவர்களுக்கு விற்று, அரசியல் ரீதியாக எங்களை வலுவிழக்கச் செய்து வருகின்றனர். நாம் அவர்களை எதிர்க்க வேண்டும், அதனால் அதே அரசியல் மூலம் சமூக ரீதியாக நம்மை மேம்படுத்த முடியும்,” என்று கூறினார்.

முன்னதாக பாகிஸ்தானில் சிறுபான்மையினருக்கென தனி வாக்காளர் தொகுதி இருந்தது. முன்னாள் ராணுவ ஆட்சியாளர் பெர்வைஸ் முஷாரஃப் 2000ஆம் ஆண்டில் முக்கிய சிறுபான்மை குழுக்களின் அமைப்பு முறையை மாற்றினார்.

சிறுபான்மையினருக்கு இப்போதும் தேசிய மற்றும் மாநில சட்டசபைகளில் இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் மற்ற குடிமக்களைப் போல நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் எந்த இடத்திலும் இருந்து தேர்தலில் போட்டியிடலாம். ஒன்றிணைந்த வாக்காளர் தொகுதிகள்தான், தங்களை வலுவிழக்கச் செய்வதாக உமர்கோட்டில் உள்ள இந்துக்கள் நம்புகிறார்கள்.

தீர்த் போன்ற பட்டியலினத்தைச் சேர்ந்த இந்து ஒருவர் சுயேச்சை வேட்பாளராக தேர்தலில் போட்டியிடுவது இது முதல்முறை அல்ல. குறிப்பாக 2013 முதல், பல பட்டியலின வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டாலும் அவர்கள் வெற்றி பெற்றதில்லை.

## இந்தவார ராசிபலன் 28.01.2024 - 03.02.2024

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - தை 14
நல்ல நேரம்: 9.36 - 11.06
ராகு காலம் : 05.06 - 06.36 திதி : திருதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

வருமானம் உயரும். தொழிலில் மாற்றம் கொண்டு வருவீர்கள். குடும்பத்தில் சச்சரவு இல்லாத சூழ்நிலை அமையும். குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறை செலுத்துவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு புதிய அனுபவம் ஏற்படும். வியாபாரிகளுக்கு கடன் வசூலாகும். விவசாயிகள் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். கலைத் துறையினர் தங்களது பணிகளில் கவனமாக இருப்பீர்கள். பெண்கள் சேமிப்பில் கவனம் செலுத்துவீர்கள். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறுவீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

பல விருப்பங்கள் ஒரேநேரத்தில் நிறைவேறும். சொத்துகள் கை வந்து சேரும். உடன் பிறந்தோர் வழியில் ஆதாயம் உண்டு. கடன் வாங்க நேரிடாது. உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகப் பணிகள் குறித்த நேரத்தில் நிறைவேறும். விவசாயிகள் புதிய மாற்றுப் பயிர்களைப் பயிரிடுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு அந்தஸ்து உயரும். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும். பெண்கள் இல்லத்தில் அமைதியைக் காண்பீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். அரசு சலுகைகள் கிடைக்கும். தாமதமாகிய சுப காரியங்கள் இப்போது நடக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு உண்டு. வியாபாரிகள் புதிய தொழில் முறைகளைக் கையாளுவீர்கள். விவசாயிகள் பயிர் விளைச்சலில் நிறைவைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் காரியங்களைச் சாதிப்பீர்கள். கலைத் துறையினரின் வருவாய் உயரும். பெண்கள் உடன்பிறந்தோருடன் ஒற்றுமையாக இருப்பீர்கள். மாணவர்கள் படிப்பில் கவனமாக இருந்து வெற்றி அடைவீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பொருளாதாரம் உயர்வாக இருக்கும். எடுத்த காரியங்கள் நிறைவேறும். பங்கு வர்த்தகம் கைகொடுக்கும். நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். வியாபாரிகள் கூட்டாளிகளின் ஆதரவைத் தக்க வைப்பீர்கள். விவசாயிகள் உபரி வருவாயைப் பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கலைத் துறையினருக்கு பிறரின் ஆதரவு கூடும். பெண்களுக்கு குடும்பத்தினரிடம் அன்பும் பாசமும் அதிகரிக்கும். மாணவர்கள் பெற்றோர் ஆதரவைப் பெறுவீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சில அலைச்சல் ஏற்பட்டாலும் செயல்களை விரைந்து முடிப்பீர்கள். சமூகப் பணிகளில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். புதியவர்களின் நட்பைப் பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வு உண்டு. வியாபாரிகள் வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். விவசாயிகள் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். அரசியல்வாதிகள் மேலிடத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள். கலைத் துறையினர் எதிர்பார்த்த வளர்ச்சியை அடைவீர்கள். பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபடுவீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

குடும்பத்தில் சுப காரிய முயற்சிகள் நிறைவேறும். தொழிலை விரிவுபடுத்துவீர்கள். எதிரிகளின் எண்ணங்களைப் புரிந்துகொள்வீர்கள். பெற்றோருக்கு மருத்துவச் செலவுகள் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் பிறரிடம் சகஜமாகப் பழகுவீர்கள். வியாபாரிகளுக்கு நன்மை உண்டாகும். விவசாயிகள் சாதுர்யமாக நடப்பீர்கள். அரசியல்வாதிகள் பொதுச் சேவையில் நன்மை அடைவீர்கள்.பெண்கள் புதிய ஆடை, அணிகலன்களை வாங்குவீர்கள். மாணவர்கள் புதிய திட்டங்களைத் தொடங்குவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். அரசு சலுகைகள் கிடைக்கும். தாமதமாகிய சுப காரியங்கள் இப்போது நடக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு உண்டு. வியாபாரிகள் புதிய தொழில் முறைகளைக் கையாளுவீர்கள். விவசாயிகள் பயிர் விளைச்சலில் நிறைவைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் காரியங்களைச் சாதிப்பீர்கள். கலைத் துறையினரின் வருவாய் உயரும். பெண்கள் உடன்பிறந்தோருடன் ஒற்றுமையாக இருப்பீர்கள். மாணவர்கள் படிப்பில் கவனமாக இருந்து வெற்றி அடைவீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

மனதுக்கினிய செய்திகள் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும். நண்பர்களின் உதவியால் வீட்டைப் புதுப்பிப்பீர்கள். வேலையில் அலைச்சல் குறையும். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் கெடுபிடிகள் குறையும். வியாபாரிகளுக்கு கூட்டுத் தொழிலில் லாபம் கிடைக்கும். விவசாயிகள் கால்நடை பராமரிப்புக்குச் செலவழிப்பீர்கள். அரசியல்வாதிகள் கட்சிப் பணியில் தீவிரமாக இருப்பீர்கள். கலைத் துறையினருக்கு பிறர் ஆதரவு கிடைக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உங்கள் வசீகரமான பேச்சால் பிறரைக் கவருவீர்கள். சமூகத்தில் மதிப்பு உயரும். பிறரிடம் வீண்வாக்குவாதம் வேண்டாம். விருப்பங்கள் நிறைவேறும். உத்தியோகஸ்தர் களின் தனித்திறமை வெளிப்படும். வியாபாரிகளுக்கு அலைச்சல் குறையும். விவசாயிகள் கடுமையாக உழைப்பீர்கள். அரசியல்வாதிகள் எதிர்க்கட்சியினரிடம் விலகியே இருப்பீர்கள். கலைத் துறையினர் புதிய ஒப்பந்தங்களைப் பெறுவீர்கள். பெண்கள் உடல் நலம், மன வளத்தைக் காக்க முயற்சிப்பீர்கள். மாணவர்கள் கவனம் சிதறாமல் படிப்பீர்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

புதிய சொத்துகளை வாங்குவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். தொழிலில் சிறப்பான வளர்ச்சி உண்டு. எவருக்கும் கடன் உத்தரவாதம் தரக்கூடாது. உத்தியோகஸ்தர்கள் பிறரை நம்ப வேண்டாம். வியாபாரிகள் திட்டமிட்டு வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். விவசாயிகள் சமூகச் சூழ்நிலைகளை அறிந்து செயல்படுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு அந்தஸ்தில் சிறு குறைபாடுகள் உண்டாகும். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்களுக்கு கணவருடனான ஒற்றுமை அதிகரிக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

புதிய சொத்துகளை வாங்குவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். தொழிலில் சிறப்பான வளர்ச்சி உண்டு. எவருக்கும் கடன் உத்தரவாதம் தரக்கூடாது. உத்தியோகஸ்தர்கள் பிறரை நம்ப வேணடாம். வியாபாரிகள் திட்டமிட்டு வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். விவசாயிகள் சமூகச் சூழ்நிலைகளை அறிந்து செயல்படுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு அந்தஸ்தில் சிறு குறைபாடுகள் உண்டாகும். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்களுக்கு கணவருடனான ஒற்றுமை அதிகரிக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

முயற்சிகள் வெற்றியடையும். முகத்தில் பொலிவும், நடையில் மிடுக்கும் உண்டாகும். பிறரை அரவணைத்துச் செல்வீர்கள். எதிர்பார்த்த வருவாய் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் ரகசியங்களைக் காப்பாற்றுவீர்கள். வியாபாரிகள் வாடிக்கையாளர்களைக் கவருவீர்கள். விவசாயிகளுக்கு லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் பெயர், புகழை தக்க வைப்பீர்கள். கலைத் துறையினருக்கு ரசிகர்களின் அன்பும், ஆதரவும் தொடரும். பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபடுவீர்கள். மாணவர்கள் பிறருடன் இணக்கமாக இருப்பீர்கள்.

# இந்தியா கூட்டணி:



# காங்கிரஸுடன் முரண்படும் திரிணாமுல், ஆம் ஆத்மி
# தமிழ்நாட்டில் தி.மு.க. என்ன சொல்கிறது?

**சாரதா வி**

இந்தியாவில் எதிர்க்கட்சிகளின் "இந்தியா" கூட்டணிக்குள் கருத்து வேறுபாடுகள் எதிர்பார்க்கப்பட்டவை தான் என்றாலும் மேற்கு வங்கத்தில் ஏற்பட்டிருக்கும் மோதல் அந்த கூட்டணி குறித்த ஊகங்களுக்கு வித்திட்டுள்ளது. அது தமிழ்நாட்டிலும் எதிரொலிக்குமா என்ற கேள்வி எழாமல் இல்லை.

மேற்கு வங்க முதல்வரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி, மக்களவை தேர்தலில் காங்கிரசுடன் தொகுதிப்பங்கீடு இல்லை என்று அறிவித்துள்ளார். காங்கிரஸ் - திரிணாமுல் கட்சிகள் இடையே தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாக ராகுல் காந்தி கூறியிருந்த நிலையில் மம்தாவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தொகுதிப் பங்கீடு குறித்த திரிணாமுல் காங்கிரஸ் பரிந்துரையை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளாததால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

"காங்கிரஸ் கட்சியிடமோ வேறு யாருடனோ நான் பேசவில்லை. நாங்கள் கொடுத்த பரிந்துரையை அவர்கள் நிராகரித்து விட்டனர். எனவே தேர்தலில் தனித்துப் போட்டி என்று முடிவு செய்யப்பட்டுள்ளது" என்றும் மம்தா பானர்ஜி தெரிவித்தார்.

ராகுல் காந்தி நடத்தி வரும் பாரத் ஜோடோ நியாய் யாத்ரா மேற்கு வங்கத்துக்குள் வருவது பற்றிய தகவலை தனக்கு தெரிவிக்கவில்லை என்று வருத்தத்துடன் கூறிய அவர் "நான் இந்தியா கூட்டணியில் அங்கமாக இருக்கிறேன். மரியாதை நிமித்தமாக கூட, எனது மாநிலத்துக்குள் வருவதை அவர்கள் தெரிவிக்கவில்லை" என்றார். இந்தியா கூட்டணியில் தொடர்வது பற்றி கருத்துக் கூறாத அவர், மத சார்பற்ற கட்சி என்ற முறையில், தேர்தலுக்கு பிறகு தனது அடுத்த கட்ட நடவடிக்கைகள் முடிவு செய்யப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

**மேற்குவங்கத்தில் காங்கிரஸ் எதிர் திரிணாமுல்**

மேற்கு வங்கத்தில் கடந்த சில நாட்களாகவே காங்கிரஸ் கட்சியும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும் ஒருவரை ஒருவர் வெளிப்படையாக குற்றம் சாட்டி வருகின்றனர். காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளில் நியாயமில்லை என்று மம்தா பானர்ஜி குற்றம் சாட்டும் நிலையில், தங்களது தயவு அவருக்கு தேவை என்று காங்கிரஸ் கட்சி பதிலளித்துள்ளது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில், மேற்கு வங்கத்தில் உள்ள 42 மக்களவை தொகுதிகளில் பஹ்ராம்புர், மால்டா தக்ஷின் என இரண்டு தொகுதிகளை காங்கிரஸ் வென்றுள்ளது. இந்த தேர்தலை இடதுசாரிகளும், காங்கிரஸ் கட்சியும் மறைமுக உடன்பாட்டோடு எதிர்கொண்டன. திரிணாமுல் காங்கிரஸ் கட்சி 22 இடங்களில் வென்றது. முதல் முறையாக பாஜக 18 நாடாளுமன்ற தொகுதிகளை வென்றது.

இந்த தேர்தலில் இரண்டு இடங்களை காங்கிரசுக்கு ஒதுக்குவதாக திரிணாமுல் காங்கிரஸ் கூறியிருந்த நிலையில், 6 தொகு திகளை காங்கிரஸ் கேட்பதாக தகவல்கள் கூறுகின்றன. காங்கிரசுக்கு மேற்கு வங்கத்தில் சராசரியாக 10 சதவீதம் வாக்குகள் இருந்த நிலையில் கடந்த தேர்தலில் இது பாதியாக குறைந்துவிட்டது. அதே சமயம் திரிணாமுல் காங்கிரஸ் தனது வாக்கு வங்கியை உயர்த்திக் கொண்டே வந்துள்ளது.

**பஞ்சாபிலும் இந்தியா கூட்டணியில் முரண்பாடு**

மாநிலக் கட்சிகளின் எண்ணிக்கையும் வலிமையும் அதிகரித்துள்ள நிலையில்



"இந்தியா" கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு சிரமங்கள் உருவாகின்றன. பஞ்சாப் முதலமைச்சர் பகவத் மன், அந்த மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியோடு தேர்தல் கூட்டணி இல்லை என தெரிவித்துள்ளார். ஆம் ஆத்மி கட்சி அந்த மாநிலத்தில் தனித்தே மக்களவைத் தேர்தலை எதிர்கொள்கிறது. இதற்கு முன் அந்த மாநிலத்தில் நடைபெற்ற சண்டிகர் மாநகராட்சி தேர்தலில் காங்கிரஸ் மற்றும் ஆம் ஆத்மி கூட்டணியாக எதிர்கொண்டிருந்தன.

கடந்த மக்களவை தேர்தலில் காங்கிரஸ் கட்சியே பெரும்பான்மையான தொகுதிகளை வென்றிருந்த நிலையில், அதற்கு பின்னர் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியை வீழ்த்தி மாநில ஆட்சியை கைப்பற்றியது ஆம் ஆத்மி கட்சி. அண்மையில் ஜலந்தர் தொகுதியில், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் உயிரிழந்த காரணத்தினால் நடைபெற்ற இடைத் தேர்தலிலும் ஆம் ஆத்மி வெற்றி பெற்றுள்ளது.

**காங்கிரஸ் கூறுவது என்ன?**

"ஒருகையை மட்டும் தட்டினால் ஓசை வருமா? தங்களால் வெல்ல முடியாத 18 தொகுதிகளை கூட்டணிக் கட்சிகளோடு பகிர்ந்து கொள்ள திரிணாமுல் முன்வர வேண்டும்" என காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற கொறடா மாணிக்கம் தாகூர் பிகூறினார் . மேலும் அவர் "கூட்டணி என்றால் என்ன? ஒன்றாக இருப்பது தானே. காங்கிரஸ் வெற்றி பெற்ற இரண்டு இடங்களை தவிர மற்ற 40 இடங்களையும் திரிணா முல் ஜெயிக்கவில்லையே" என்று கேள்வி எழுப்பினார்.



நிலைமை எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரி இல்லை என்கிறார் மாணிக்கம் தாகூர், "சில மாநிலங்களில் கண்டிப்பாக கூட்டணி கட்சிகளை எதிர்த்து நிற்க வேண்டிய சூழல் உள்ளது. உதாரணமாக கேரளாவில் காங்கிரஸும் கம்யூனிஸ்ட் கட்சியும் கண்டிப்பாக ஒரே அணியில் நிற்க முடியாது. அதேபோன்ற மாநிலம் தான் பஞ்சாப். அதே சமயம் ஆம் ஆத்மி கட்சி செயல்படும் டெல்லி, குஜராத் என பிற மாநிலங்களை கணக்கில் கொண்டு, தேசிய அளவில் கூட்டணி பேசலாம் என்கிறோம்" என்றார்.

**தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணி நிலை என்ன?**

தமிழ்நாட்டை பொருத்தவரை, இந்தியா கூட்டணிக்குள் அதாவது, திமுக தலைமையிலான அணியில் நிலைமை சுமூகமாகவே உள்ளதாக திமுகவும், காங்கிரசும் கூறுகின்றன.

இந்தியா கூட்டணியின் மிக முக்கியமான அங்கமாக உள்ள திமுக, கட்சிகளுக்குள் ஒற்றுமை அவசியம் என்று கருத்து தெரிவித்துள்ளது. திமுக பொருளாளரும் இந்தியா கூட்டணியின் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினருமான டி.ஆர்.பாலு, "இந்தியா கூட்டணியில் இருக்கும் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் 36 வீதம் மட்டுமே பாஜக பெற்றிருந்தது. எனவே, இந்த முறை இந்தியா கூட்டணி வெல்வதற்கான அனைத்து வாய்ப்புகளும் உள்ளன. எனவே கூட்டணி கட்சிகள் தங்களுக்குள்ளேயே பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும்." என்றார்.

"தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியுடனான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை வரும் 28ஆம் தேதி நடைபெறுகிறது. அடுத்தடுத்த நாட்களில் பிற கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்." என்றும் டி.ஆர்.பாலு தெரிவித்தார்.

மாணிக்கம் தாகூர் தெரிவிக்கையில், "திமுகவுடனான கூட்டணி மிக சுமூகமாக இருக்கிறது. இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி பிரச்னைகள் சில தசாப்தங்களுக்கு முன் இருந்தன. ஆனால், தற்போது, பல காலமாக நல்ல புரிதலுடன் இந்த கூட்டணி இருந்து வருகிறது. இந்த தேர்தல் காங்கிரஸுக்கு முக்கியமான தேர்தல், இந்தியா கூட்டணி காங்கிரஸுக்கு முக்கியமானது." என்றார்.

**"இந்தியா கூட்டணிக்கு அல்ல, காங்கிரசுக்கே சவாலானது"**

"மாநில கட்சிகள் அவரவர் மாநிலங்களில் வலுவாக உள்ளன. எனவே தங்கள் இடங்களை விட்டுக் கொடுத்து காங்கிரஸ் அந்த இடத்தில் வெற்றி பெற வேண்டும் என நினைக்க மாட்டார்கள்" என்றார் மூத்த பத்திரிக்கையாளர் மாலன். மேலும் அவர், பாஜக எதிர்ப்பு என்ற ஒற்றை நோக்கத்திலேயே இந்த கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. சிந்தாந்த ரீதியாக ஒன்றுபட்ட கூட்டணி அல்ல. எனவே இது போன்ற மோதல்கள் எதிர்பார்க்கப்பட்டது தான். இவை இந்தியா கூட்டணிக்கான சவால் என்பதை விட காங்கிரஸ் கட்சிக்கான சவாலாகவே உள்ளது" என்று குறிப்பிட்டார்.

காங்கிரஸ் கட்சி வலிமையாக இருந்தால்தான் தேர்தலுக்கு பின் மதச்சார்பற்ற கட்சிகளின் கூட்டணி சாத்தியமாகும். வேறு விதமான புரிதல்களும் ஏற்படலாம் என்கிறார் பத்திரிகையாளர் மாலன், "தேர்தலுக்கு பிந்தைய கூட்டணி என்பது அவரவர் பெறக் கூடிய இடங்களின் எண்ணிக்கையை பொருத்தது. பாஜகவுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை என்ற சூழல் ஏற்பட்டால் காங்கிரஸ் கட்சியின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலே தேர்தலுக்கு பிந்தைய கூட்டணி சாத்தியமாகும். சில நேரம் நாடாளுமன்ற விவகாரங்களில் ஒத்துழைப்பு தருவது என்ற புரிதலும் வரலாம்" என்கிறார் அவர்.

●

# பாரதியின் கனவு மெய்ப்படும் காலம் நெருங்குகிறதா?

கந்தையா அருந்தவபாலன்

‘சிந்து நதியின்மிசை நிலவினிலே சேர நன்னாட்டிளம் பெண்களுடனே’ என்று அடியெடுத்து ‘சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம் சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்’ என்று தனது கவிதையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தரைவழித் தொடர்பை ஏற்படுத்த வேண்டுமென இற்றைக்கு நூறாண்டுகளுக்கு முன் இந்திய தேசியத் தமிழ்க்கவி பாரதி கனவு கண்டான். அவன் கண்ட கனவை நனவாக்குவதற்கு இன்று நேற்றல்ல பிரித்தானியரின் ‘சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியத்தின்’ கீழ் இலங்கையும் இந்தியாவும் இருந்த காலத்திலிருந்தே முயற்சிக்கப்பட்டு வந்தாலும் இன்னும் அது நிறைவேறாத ஒன்றாகவே இருந்து வருவதைக் காணலாம். பிரித்தானியர் தமது பல்வேறு தேவைகளுக்காக இந்தியப் பெருநிலப்பரப்பிலிருந்து இராமேஸ்வரம், தனுஷ்கோடி, தலைமன்னார் ஊடாக இலங்கையின் பெருநிலப்பரப்புடன் தரைவழித் தொடர்பை குறிப்பாக இரும்புப் பாதையை அமைப்பதற்கான முயற்சிகளை எடுத்திருந்தனர். அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஜேர்மானியப் பொறியலாளர்கள் அதற்கான சாத்தியங்களை மதிப்பிட்டிருந்தனர். அதன்படி சுமார் 9.2 மில்லியன் பவுண்ட் ஸ்ரேலிங் செலவாகுமென அப்போது கணிப்பிடப்பட்டிருந்தது. அதில் ஒருபகுதி நிதி விடுவிக்கப்பட்டே பாம்பன் பாலமும் அதனூடாக தனுஷ்கோடி வரையான இரும்புப் பாதையும் நிர்மாணிக்கப் பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. பாம்பன் பாலம் தொடர்பான மதிப்பீடுகள் 1870 களில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் 1911 இலேயே வேலைகள் தொடங்கப் பெற்று 1914 இல் நிறைவு செய்யப்பட்டது. தொடர்ந்து அத்திட்டத்தின் மிகுதி வேலைகள் முன்னெடுக்கப்படாது இந்தியாவுக்கும் இலங்கைக்குக் இடையிலான இவ்வழியிலான போக்குவரத்து தனுஷ்கோடிக்குக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான கப்பல் சேவையுடன் இணைந்த புகையண்டிச் சேவையாக 1980 கள் வரை இடம்பெற்று வந்தது.

மீண்டும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இத்திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இவ்விரு நாடுகளுக்கு மிடையே இடம்பெற்றது. இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தமும் சமாதான பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்ற 2002 - 2004 இடைப்பட்ட காலத்தில் அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான கோரிக்கையை இந்தியாவிடம் முன் வைத்தார். 23 மஅ நீளமான இந்த ‘பாக்கு நீரிணை பாலம் மற்றும் சுரங்கப்பாதை’ (Palk strait Bridge and Tunnel)இணைந்த திட்டம் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக கிடப்பில் போய்விட்டது. பின்னர் 2015 இல் அப்போதைய இந்திய ஒன்றிய அரசின் நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரி அவர்களால் இது தொடர்பான முன்மொழிவு ஒன்று ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டது எனினும் அது இலங்கையின் அப்போதைய போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சராக இருந்த லக்ஷ்மன் ஹிரியெல்லவால் நிராகரிக்கப்பட்டது. சீனாவின் அழுத்தம் காரணமாகவே இலங்கை அரசு அதனை நிராகரித்தது என இந்திய தரப்பில் அப்போது கூறப்பட்டது. இத்திட்டம் தொடர்பான இன்னொரு முன்னேற்றகரமான சாத்திய ஆய்வு ஒன்று சு. ரெங்கராஜன், ஆஞ்சநேயலு, டீ.ஏ. வெங்கட்ராம ரெட்டி போன்றவர்களால் மேற்கொள்ளப்பட்டு ‘Journal of Engineering Design and Technology’ என்ற பருவகால இதழில் வெளியிடப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத் தக்கது. தற்போது அத்திட்டம் மீண்டும் பேசு பொருளாகியுள்ளது. ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நீண்ட இழுபறிகளின் பிறகு சென்ற ஆண்டு இந்தியாவின் அழைப்பை யேற்று அங்கு சென்ற போது அவருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் இடம்பெற்ற பச்சுவார்த்தை களின் போது ரணிலால் இத்திட்டம் தொடர்பான கோரிக்கை முன்வைக்கப்பட்டு உடன்பாடு காணப்பட்டது. அதற் கமைய தற்போது இந்தியா அத்திட்டம் தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகளில் இறங்கி யுள்ளதை அவதானிக்க முடிகிறது.

சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் இவ்வாறான ஒரு திட்டத்தை விருப்புடன் வரவேற்பார்கள் என்று கூற முடியாது. ஏனெனில் பெரும்பாலான சிங்கள மக்களைப் பொறுத்து இந்தியாவை எப்போதும் ஐயத்துடனும் அச்சத்துடனும் நோக்கும் நிலையே இன்று வரை காணப்பட்டு வருகிறது. புராணக் கதையான இராமாயணம் தொடக்கம் வரலாற்றில் பல்வேறு காலங்களிலும் இந்தியாவை தங்கள் நாட்டின் மீதான ஆக்கிரமிப்பாளர்களாகவே கருதி வருகிறார்கள். ஆனால் அவ்வாறு வந்தவர்களின் சந்ததியே தாங்கள் என்பதை மறந்து விட்டார்கள். அத்துடன் இத்திட்டத்தின் மூலம் வடக்குக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான நெருக்கம் அதிகரிப்பதையும் அவர்கள் விரும்பமாட்டார்கள். தமிழர்களைப் பொறுத்தும் இதற்கு எதிரான மனநிலையைக் கொண்ட ஒரு தரப்பினர் இருக்கிறார்கள். ஏற்கனவே அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் பல செயற்பாடுகள் தமிழ்த் தேசிய உணர்வை மழுங்கடிப்பதற்கான மறைமுக நிகழ்ச்சி நிரல் என்ற ஐயுறவில் இருந்து வருவதையும் காணலாம். இத்தகைய ஒரு சூழ்நிலையில் மோடியுடனான சந்திப்பின்போது இத்திட்டத்தை ரணில் முன்மொழிந்தமைக்கு இரு பிரதான காரணங்கள் இருக்குமெனக் கருதலாம். ஒன்று இலங்கையில் தனது அரசியல் இருப்பைத் தக்கவைப்பதற்காக இந்தியாவைக் குளிரச் செய்வது. இரண்டாவது எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கான அடிக்கட்டுமான முதலீடாக அது அமையுமெனக் கருதுவது.

பல்வேறு பொருளாதார, அரசியல் தேவைகளுக்காக நாடுகளுக்கிடையிலான தரைவழித் தொடர்புகளின் விருத்திக்காலகட்டத்தில் தற்போது உலகம் நகர்ந்து கொண்டிருக்கிறது. அண்டைநாடுகளுடனான தொடர்புகளைத்தாண்டி தற்போது பிரதேச நாடுகளுக்கிடையிலும், அயல் கண்ட நாடுகளுக்கிடையிலும் தரைவழித் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 150 நாடுகளை ஒன்றிணைக்கும் சீனாவின் பட்டுப்பாதைத் திட்டம் 2011 ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோன்று இந்தியாவை மத்திய கிழக்கு நாடுகளூடாக ஐரோப்பாவுடன் இணைக்கும் ஒரு திட்டத்தை (India-Middle East- Europe Economic Corridor-IMEC) சென்ற ஆண்டின் இறுதியில் நடந்த ஜி20 மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்மொழிந்துள்ளார். இந்திட்டங்களுடன் ஒப்பிடும் போது இலங்கை - இந்தியத் தரைவழிப் பாதைத் திட்டம் மிகச்சிறிய ஒன்றெனலாம். எனினும் இதன்மூலம் இவ்விரு நாடுகளுக்கும் பல பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உலகில் இன்று வேகமாக வளர்ந்து வரும் நாடுகளாக சீனாவும் இந்தியாவும் காணப்படுகின்றன. உலகப்பொருளாதார நிலையில் சீனா இரண்டாம் இடத்தில் இருப்பதுடன் இந்தியா சென்ற ஆண்டு ஐக்கிய இராச்சியத்தைப் பின்தள்ளி ஐந்தாம் இடத்துக்கு முன்னேறியுள்ளது. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதிக்குள் இவ்விரு நாடுகளும் முதல் இரண்டு இடங்களுக்கு முன்னேறிவிடும் என எதிர்வு கூறப்படுகிறது. இந்நிலையில் பாக்கு நீரிணைத் தரைவழித்திட்டம் இந்தியாவுக்கு மட்டுமன்றி இலங்கைக்கும் பல நன்மைகளைக் கொண்டுவரும். இலங்கையின் இன்றைய பொருளாதாரப் பின்னடைவு நிலையைப் பயன்படுத்தி இந்தியாவும் சீனாவும் போட்டி போட்டு பல்வேறு முதலீட்டுத் திட்டங்களைக் கையகப்படுத்தி வருகின்றன. இதில் இந்தியா முந்துவதற்கான வாய்ப்பே அதிகம் உள்ளது. இலங்கையின் பிரதான வர்த்தகப் பங்காளியாக இந்தியா இருந்து வருவதுடன் நேரடி முதலீட்டிலும் முக்கிய இடத்தை வகித்து வருகிறது. 2021 ஆம் ஆண்டில் இலங்கையுடனான இந்தியாவின் வர்த்தகம் 5.45 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமானது. அதே போல அவ்வாண்டில் இலங்கையில் அந்நாட்டின் நேரடி முதலீடு 2.2 பில்லியன் அமெரிக்க டொலராகும். தற்போது இது பன்மடங்காக அதிகரித்துள்ளது. வடக்கில் மட்டுமல்ல கிழக்கில் திருகோணமலை, மேற்கில் கொழும்புத் துறைமுகம், தெற்கில் ஹம்பாந்தோட்ட என நாட்டில் பரவலாக இந்திய முதலீடுகள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் பாக்குநீரிணை தரைவழித் திட்டம் இந்தியாவுக்கு மிக அவசியமான ஒன்றாக அமைந்தாலும் இலங்கைக்கும் அதனால் பல நன்மைகள் கிடைக்கும். இந்திய அரச மற்றும் தனியார் துறை முதலீடு களின் உட்பாய்ச்சல் அதிரிப்பதுடன் இரு நாடுகளின் வர்த்தகமும் செழிப்படையும். போக்கு வரவுச் செலவுகள் கணிசமாகக் குறைவதற்கு வாய்ப்பு ஏற்படு வதால் வர்த்தகம், தொழில் துறைகள் விரிவடைவதுடன் அதன் மூலமான நன்மைகளை இலங்கை மக்கள் பெறமுடியும். இருநாடுகளின் தொழில் முனைவோரின் கூட்டு முயற்சிகளும் அதிகரிக்கும் நிலை தோன்றும். சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் பல உருவாக முடிவதுடன் அதற்கான மூலப் பொருட்கள், தொழில்நுட்பம் போன்ற வற்றை இலகுவாகப் பெறுவதற்கான வாய்ப்புகளும் உருவாகும். உல்லாசப் பயணத்துறையில் ஏற்படக் கூடிய அபரித மான வளர்ச்சியினால் இலங்கை அதிக நன்மைகளைப் பெறமுடியும். இலங்கையின் உல்லாசப் பயணத்துறையைப் பொறுத்தமட்டில் இந்தியர்களின் எண்ணிக்கையே முதலிடத்தில் உள்ளது. ஆண்டு தோறும் சுமார் 2.5 இலட்சம் தொடக்கம் 3 இலட்சம் வரையிலான இந்திய உல்லாசப் பயணிகள் இலங்கை வருவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. போக்குவரவுச் செலவு குறைதல், களிக்கும் காட்சிகளும் இடங்களும் அதிகரித்தல் போன்றவற்றால் இத்துறை மேலும் வளர்ச்சி அடையும். இது இந்தியா செல்லும் இலங்கையர்களுக்கும் பொருந்தும்.

நன்மைகளைப் போலவே இத்திட்டத்தினால் ஒருசில பாதிப்புகளும் ஏற்படவே செய்யும். குறிப்பாகச் சுற்றுச் சூழல் பாதிப்புகள், கடற்றொழில்சார் பிரச்சினைகள் தொடர்பாகத் திட்டமிடலின் போது அதிக அக்கறை காட்டப்பட வேண்டும். வர்த்தகம், போக்குவரத்து விரிவடையும்போது அதனை நேர்வழியில் பயன்படுத்துவோர் தொகை அதிகரிப்பது போலவே எதிர்மறை நடவடிக்கைகளில் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரிப்பது இயல்பு. சட்டத்துக்குப் புறம்பான இதுபோன்ற நடவடிக்கைகளையும், பண்பாட்டுப் பாதிப்புகளையும் கட்டுப்படுத்து வதற்கான நடைமுறைத்திட்டங்கள் அவசியமானவை. அதேபோல பெரிய நாடுகளின் பொருளாதார ஆதிக்கம் மறைமுகமான அரசியல் ஆதிக்கம் என்ப தையும் மறுக்க முடியாது. மீன்முள்ளு தொண்டையில் குத்தும் என்பதற்காக நாம் மீனை உண்ணாது விடுவதில்லையே.

இத்திட்டத்தின் மூலம் உருவாகக் கூடிய சாதகமான வாய்ப்புகளை வடக்கு மக்கள் சரியான முறையில் பயன்படுத்தினால் ஒப்பீட்டு ரீதியில் அதிகளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். உலக நாடுகளின் தற்போதைய அரசியல், பொருளாதாரச் சிந்தனைகளையும் போக்குகளையும் சரியான முறையில் கணிப்பிட்டு அதற்கேற்றவகையில் எம்மைத் தகவமைப்பதன் மூலமே எமது சந்ததியை அடுத்த கட்டத்துக்கு உயர்த்த முடியும். எதிர்ப்புகள் மூலம் எதனையும் அடைய முடியாதென்பதையும் அதன் மூலம் நன்மைக்குப் பதிலாக தீமைகளே அதிகம் விளைகின்றன என்பதையும் நிதர்சனமாக கண்டுவரும் இவ்வேளையில் அதற்குப் பதிலாக இவற்றை எம்மவர்களுக்கானதாக எப்படி மாற்ற முடியுமெனச் சிந்திப்பதே அறிவார்ந்த உத்தியாக இருக்கும். இந்தவகையில் பொருளாதார ரீதியில் மிக வேகமாக வளர்ந்து வரும் இந்தியாவிடமிருந்து அதிகளவு நன்மைகளை எவ்வாறு பெறுவது என்று சிந்திப்பதே இலங்கையின் இப்போதைய தேவையாகும். இலங்கையில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் இன்று உருவாக்கப்படும் பொருளாதாரக் கட்டமைப்புகளிலிருந்து பின்வாங்குவதற்கான வாய்ப்புகள் இருக்காது என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை பின்வாங்கும் கொள்கையுடையோர் ஆட்சிக்கு வரவும் சம்பந்தப்பட்ட நாடுகள் அனுமதிக்காதென்பது.





# தேர்தல்களை இலக்கு வைக்கும் கருத்துச் சுதந்திர மரண மணி!

பனங்காட்டான்



ரணில் தலைமையிலான இன்றைய ‘கலப்பு’ ஆட்சிபீடம் மிகமிக அவசரப்பட்டு, கடுமையான பிரயத்தனத்தின் பின்னர் இணையவழி (நிகழ்நிலை) பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

இதன் வழியாக தெரியவரும் பிரதான அம்சம், விரைவில் அடுத்தடுத்து பல தேர்தல்கள் இடம்பெறவுள்ளன. அடுத்த மாத சுதந்திர தின நிகழ்வையடுத்து அதிகாரபூர்வமாக தமது தேர்தல் போட்டியை ரணில் அறிவிப்பாரென அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

“யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே” என்ற பழமொழியை நினைவூட்டும் வகையில் இம்மசோதா நிறைவேற்றப்பட்டதை கருத்துச் சுதந்திரத்துக்கான மரண மணி என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஊடக நிறுவனங்கள் மற்றும் நாற்பதுக்கும் மேற்பட்ட மனுதாரர்கள் கடந்த வருடமே உயர்நீதிமன்றில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த மசோதா, இணையம் மற்றும் சமூக ஊடகங்களில் மக்கள் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துவதை தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது. தவறான அறிக்கை என்று கருதும் எந்தவொரு இடுகையையும் 24 மணி நேரத்துக்குள் அகற்ற ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஆணையத்தை இந்த மசோதா அனுமதிக்கிறது. இந்த மசோதாவினால் கூகிள், பேஸ்புக், ருவிற்றர், இன்ஸ்ரா கிராம், வட்ஸ்அப், கூகிள் தேடல், கூகுள் வரைபடம், ஜிமெயில் போன்ற அத்தியாவசிய சேவைகளை இலங்கை இழக்கக் கூடுமென இந்த அமைப்புகள் தெரிவித்திருந்தன.

இவை எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்காகி விட்டன. அனைத்து எதிர்ப்புகளையும் தாண்டி விவாதத்துக்காக கடந்த வாரம் இது நாடாளுமன்றத்துக்கு வந்தது. நாடாளுமன்ற அமர்வை கடந்த 27ம் திகதி ஒத்திவைப்பதற்கு முன்னர் எப்பாடுபட்டாவது இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென ஆட்சித்தரப்பு துடித்தது. இதனை நிறுத்துவதற்கான பகீரத முயற்சிகளை வாக்குவாதங்களூடாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேற்கொண்டனர். தங்கள் தரப்பிலுள்ள பெரும்பான்மையால் எதனையும் சாதிக்க முடியும் என நம்பும் ஆட்சித்தரப்பு இந்த மசோதா மீது விவாதிப்பதா இல்லையா என்பதை தீர்மானிக்க வாக்கெடுப்பு நடத்தக் கோரியது.

உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டத்திலுள்ள 57 திருத்தங்களில் 34ஐ உயர்நீதிமன்றம் முன்வைத்திருந்ததை ஒட்டிய துறைசார் மேற்பார்வைக்குழு அறிக்கையை சமர்ப்பிக்காமல் விவாதம் இடம்பெறக்கூடாதென எதிர்த்தரப்புகள் வாதாடின. இதன் மீதான வாக்கெடுப்பில் அரச தரப்புக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைத்ததால் 23ம் 24ம் திகதிகளில் விவாதம் இடம்பெற்றது.

இரண்டு நாள் விவாத முடிவில் ஆதரவாக 108 வாக்குகளும், எதிராக 62 வாக்குகளும் கிடைத்ததால் 47 மேலதிக வாக்குகளால் சட்டம் நிறைவேறியது. 54 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்குபற்றாததையும் இங்கு பதிவிட வேண்டும். அண்மையில் விளையாட்டுத்துறை அமைச்சர் பதவியிலிறுந்து நீக்கப்பட்ட பின்னரும் அரச தரப்பு எம்.பியாக இருக்கும் றொசான் ரணசிங்க மசோதாவுக்கு எதிராக வாக்களித்தாராயினும் இவர் மீது எந்த நடவடிக்கையையும் எடுக்கும் நிலையில் ரணில் விக்கிரமசிங்க இல்லையென்பதையும் குறிப்பிட வேண்டும்.

மக்களின் உரையாடல்களை உளவு பார்க்க அனுமதிப்பதில் கட்டமைக்கப்பட்ட தனியுரிமை மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் இல்லாததை பலரும் விவாதத்தில் சுட்டிக்காட்டினர். எனினும் மாற்றமேதும் இன்றியே மசோதா சட்டமாக்கப்பட்டது. நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி சர்வதேச மட்டத்தில் தொழிற்படும் இணையவழி ஊடகங்களை, அவை வெளியிடும் கருத்துக்களை, பொதுமக்களும் அமைப்புகளும் அவற்றினூடாகத் தெரிவிக்கும் அபிப்பிராயங்களை நசுக்குவதே இச்சட்டத்தின் அடிப்படை என்று எதிர்தரப்பினர் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறினர்.

கருத்துச் சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகளில் முக்கியமானது. ஜனநாயகத்தை ஆங்கிலத்தில் டெமோக்கிரஸி என்று கூறி வந்தாலும், இது கிரேக்க மொழியின் பதம். டெமோ என்பது மக்கள் எனவும், கிறெற்றோல் என்பது சக்தி எனவும் குறிப்பிடப்படுவது. ஆக டெமோக்கிரஸி என்பது மக்கள் சக்தி என்று அர்த்தம் கொண்டது.

அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த ஏப்ரகாம் லிங்கன் ஜனநாயகம் பற்றிக் குறிப்பிடுகையில், The democracy is - of the people, by the people, for the people என்று விபரித்துள்ளார். மொத்தத்தில் மக்களால் மக்களுக்காக பாதுகாக்கப்பட வேண்டிய ஜனநாயகம் என்பது ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் தங்களிடமுள்ள பெரும்பான்மையைப் பயன்படுத்தி அதனை நசுக்குவதாக மாற்றமடைந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ‘கலப்பு ஜனநாயக அரசு’ கருத்துச் சுதந்திரத்தை (இதனை ஊடக சுதந்திரம் என்று சொல்வர்) எவ்வாறு அழித்தொழிக்க முயற்சிக்கின்றது என்பதைப் பார்க்கையில், 1964ம் ஆண்டில் அன்றைய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தை அரசுடமையாக்க எடுத்த முயற்சிகள் எவ்வாறு முறியடிக்கப்பட்டது என்பதை நினைவுக்குட்படுத்துவது தவிர்க்க முடியாதுள்ளது.

லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் ரணில் விக்கிரமசிங்கவின் பாட்டனார் (தாயாரின் தகப்பன்) டி.ஆர்.விஜேவர்த்தனவால் உருவாக்கப்பட்டது. அவரது மரணத்தின் பின்னர் தாய்மாமனார் றஞ்சித் விஜேவர்த்தன இதனை பொறுப்பேற்று நடத்தி வந்தார். ரணிலின் தாயார் நளினி விக்கிரமசிங்க லேக்ஹவுஸின் பணிப்பாளர்களில் ஒருவர். ரணிலின் தந்தையாரான எஸ்மன்ட் விக்கிரமசிங்க லேக்ஹவுஸின் ‘மூளை’யாக இயங்கி வந்தவர். இவ்வேளையிலேயே லேக்ஹவுஸை அரசுடமையாக்க சிறிமாவோ நடவடிக்கை எடுத்திருந்தார்.

1964ல் இந்நிறுவனத்தை அரசுடமையாக்கும் மசோதா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாயினும் அது நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டது. புதிய அமர்வு ஆரம்பிப்பதற்கிடையில் சிறிமாவோவின் ஆட்சியை கவிழ்ப்பதற்கான நடவடிக்கைகளை ரணிலின் தந்தையான எஸ்மன்ட் விக்கிரமசிங்கவும், பெரிய தந்தையார் முறையான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் மிக ரகசியமாக மேற்கொண்டனர். புதிய அமர்வின் சிம்மாசனப்பிரசங்க வாக்கெடுப்பின் போது இது நிகழ்ந்தது. சிறீலங்கா சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற குழுத்தலைவரான அமைச்சர் சி.பி.டி.சில்வா ஆட்சித்தரப்பிலிருந்து எதிர்த்தரப்புக்குச் சென்று ஐக்கிய தேசிய கட்சியோடு சேர்ந்து கொண்டார். பிரதிச் சபாநாயகர் டி.ஏ.ராஜபக்ச (மகிந்தவின் தந்தை) தலைமையில் சபை அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது இந்தக் கட்சித்தாவல் இடம்பெற்றது. சி.பி.டி.சில்வாவைத் தொடர்ந்து மற்றும் சில சுதந்திரக் கட்சி எம்.பிக்களும் ஐக்கிய தேசிய கட்சிப் பக்கம் பாய்ந்தனர். சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பில் சிறிமாவோ ஆட்சி ஒரு வாக்குக் குறைவினால் கவிழ்க்கப்பட்டது.

> **1973ல் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தை அரசுடமையாக்கிய சிறிமாவோ அரசு 1974ல் ‘சன்’ பத்திரிகை நிறுவனத்தை சீல் வைத்து மூடி ஊடக சுதந்திரத்தை நசுக்கியது. அவ்வேளை அரச பத்திரிகையான டெய்லி நியூசில் ‘ஜனநாயகம் அகால மரணம்’ என ஆங்கிலத்தில் நுட்பமாக வரையப்பட்ட மரண அறிவித்தல் விளம்பரமாக வெளிவந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அது பின்வருமாறு அமைந்திருந்தது:**
> 'The death occured under tragic circumstances of D.E.M.O' Cracy, beloved husband of T.Ruth, loving father of L.I.Bertie, Faith and Justica. Interred on Saturday 20th instant. Araliya Medora, Panagiyawatte."

தமது தந்தையும், பெரிய தந்தையும் 1964ல் ஊடக சுதந்திரத்தைக் காப்பாற்ற கையாண்ட முறைமைகளுக்கு எதிரான செயற்பாடுகளில் ரணில் ஈடுபட்டிருப்பதை இணையவழி பாதுகாப்பு என்ற பெயரில் நிறைவேற்றப்பட்ட சட்டம் எடுத்துக்காட்டுகிறது.

1970ம் ஆண்டில் மீண்டும் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ தம்மோடு இணைந்திருந்த இடதுசாரிகளின் ஆதரவுடன் 1973ல் லேக்ஹவுஸை அரசுடமையாக்கும் முயற்சியில் வெற்றி கண்டார். மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவருக்கிருந்ததால் இது சுலபமாகியது.

1970ம் ஆண்டுத் தேர்தலில் தமக்கு ஆதரவாக செயற்பட்ட சன் குழுமம் பத்திரிகை நிறுவனத்தை அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி சிறிமாவோ அரசு 1974ம் ஆண்டில் சீல் வைத்தது. இதன் பிரதிபலிப்பாக அதே ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதி லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆங்கில வெளியீடான டெய்லி நியூஸ் பத்திரிகையில் மரண அறிவித்தல் ஒன்று விளம்பரமாக வெளியாகி நாடு கடந்தும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

D.E.M.O' Cracy அகால மரணமானார் என்பது இந்த அறிவித்தல். ஆங்கிலப் பெயர் டெமோகிரஸி (ஜனநாயகம்) என்ற அர்த்தத்தைக் கொடுக்கும் வகையில், நான்கு முதல் எழுத்துகளும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு இந்த மரண அறிவித்தல் வரையப்பட்டிருந்தது. ஊடக சுதந்திரம் அழிக்கப்பட்டது என்பதை ஜனநாயகம் அகால மரணமானது என்ற வகையில் வெகு நுட்பமாக இது வரையப்பட்டு, அரசுடமையாக்கிய பத்திரிகையிலேயே பணம் செலுத்தி பிரசுரிக்கும் துணிச்சல் அன்று எவரோ ஒருவருக்கு இருந்துள்ளது.

இந்த மரண அறிவித்தல் டெய்லி நியூஸ் பத்திரிகையில் 1974 ஏப்ரல் 24ம் திகதி பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:

'The death occured under tragic circumstances of D.E.M.O' Cracy, beloved husband of T.Ruth, loving father of L.I.Bertie, Faith and Justica. Interred on Saturday 20th instant. Araliya Medora, Panagiyawatte."

இதன் தமிழாக்கம் பின்வருமாறு: உண்மையின் கணவரும், சுதந்திரம், நம்பிக்கை, நீதி ஆகியோரின் அன்புத் தந்தையுமான ஜனநாயகம் அகால மரணமடைந்தார். நல்லடக்கம் இருபதாம் திகதி புத்திசாலிப்பெண் பூந்தோட்டத்தில் இடம்பெற்றது.

இந்த அகால மரண அறிவித்தல் யாரால் வரையப்பட்டிருக்கும் என்ற கேள்வி பல வருடங்களாக பேசப்பட்டு வந்தது. இதனை வரைந்தவரான மருத்துவர் (டாக்டர்) றிலி பெர்னான்டோ (Dr. Riley Fernando) கடந்த வருடம் யூன் மாதம் 15ம் திகதி முதுமை காரணமாக இயற்கை எய்தினார்.

ஊடக சுதந்திரம் படுகொலை செய்யப்பட்டதை அம்பலப்படுத்தும் நோக்குடன் மிகவும் சாதுரியமாக தமது பேனாவைப் பயன்படுத்திய இவர் இலங்கையின் ஊடக வரலாற்றில் பெயர் பொறிக்கப்பட வேண்டியவர்.

ஊடக சாம்ராஜ்யத்தின் (லேக்ஹவுஸ்) வழித்தோன்றலான ரணில் விக்கிரமசிங்க கருத்துச் சுதந்திரத்துக்கு சாவு மணி அடிக்கும் இன்றைய நாட்களில், அறகலய போராட்டம் நடத்தி கோட்டாபயவை நாட்டைவிட்டு ஓடவைத்தவர்களில் ஒருவர்கூட டாக்டர் றிலி பெர்னான்டோ போன்று இல்லையா என்று கேட்க வேண்டியுள்ளது.


# Leap Year : மிகுநாள் ஆண்டுகள் பெப்ரவரி 29 உடன் தொடர்புடைய சுவாரஸ்யமான பாரம்பரியங்கள்!

இந்த ஆண்டு நமது காலண்டரில் கூடு தலாக ஒரு நாள் சேர்க்கப்படு கிறது. வழக்கமான 365 நாட்கள் அல்லா மல் 366 நாட்களுடன் ஆங்கிலத்தில் இருக்கும் ஆண்டு, லீப் ஆண்டு (Leap Year) என்று அழைக்கப்படும் மிகுநாள் ஆண்டாக 2024 இருக்கும்.

ஆண்டின் மிகச்சிறிய மாதத்துக்குக் கூடுதலாக ஒரு நாள் கிடைக்கிறது. பெப்ரவரி 29ஆம் தேதி மிகு நாள் (லீப் நாள்) என்று அழைக்கப்படுகிறது. மூட நம்பிக்கைகளும் கலாசார பாரம்பரியங் களும் இந்த நாளுடன் தொடர்புடைய தாக இருக்கின்றன.

மிகுநாள் ஆண்டு ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும். இதற்கு முந்தைய மிகுநாள் ஆண்டு 2020, அடுத்த மிகுநாள் ஆண்டு 2028.



இதற்கு விதிவிலக்கு உண்டு. அது குறித்து விரிவாகக் கீழே பார்க்கலாம்.

**ஏன் மிகுநாள் ஆண்டு நிகழ்கிறது?**

ஓர் ஆண்டு என்பது பொதுவாக 365 நாட்களைக் கொண்டது. ஏனென்றால், பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வர எடுத் துக் கொள்ளும் அவகாசம் இது. ஆனால், 365 என்பது ஒரு தோராயமான எண்ணிக்கை மட்டுமே

பூமி சூரியனை முழுமையாக ஒரு முறை சுற்றி வர 365.242190 நாட்கள் ஆகும். அதாவது 365 நாட்கள், 5 மணி நேரங்கள், 48 நிமிடங்கள், 56 நொடிகள். இது விண்மீன் ஆண்டு எனப்படும். அதாவது பூமி சூரியனைச் சுற்றிச் சுழலும் உண்மையான கால அளவு. ஆங்கிலத்தில் இதை எனைநசநயட லநயச என்பர்.

நாட்காட்டியில் உள்ள 365 நாட் களைவிட மிகுநாள் ஆண்டு சற்று கூடுத லானது. எனவே கூடுதலான இந்த நேரத்தைச் சரிக் கட்டுவதற்காக நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, ஒரு முழு நாள் நமது நாட்காட்டியில் கூடுதலாகச் சேர்க்கப்படுகிறது. இதன்மூலம், நமது நாட்காட்டி மாறி வரும் பருவங்களுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கும்.

**மிகுநாள் ஆண்டு பாரம்பரியங்கள் என்ன?**

மிகுநாள் ஆண்டுடன் தொடர்பு டைய பல பாரம்பரியங்கள் மற்றும் மூட நம்பிக்கைகள் உள்ளன.

திருமணமாகாத ஆண்களுக்கான இந்த தினத்தில், அயர்லாந்து நாட்டு பாரம்பரியத்தின்படி, பெண்கள் ஆண்க ளிடம் திருமண விருப்பத்தைத் தெரிவிக் கலாம். இது மிகுநாளில் நடைபெறும்.

நாகரிகம் மாறி வரும் காலத்தில் பெண்கள் ஆண்டின் எந்த நாளில் வேண்டுமானாலும் ஆண்களிடம் தங்கள் திருமண விருப்பத்தை வெளிப்படுத்த லாம். ஆனால் இந்தக் குறிப்பிட்ட பாரம்பரியம் 5ஆம் நூற்றாண்டில் தொடங்கியது.

தூதர் பிரிட்ஜெட் மற்றும் தூதர் பாட்ரிக் இடையில் நடைபெற்றதாகக் கூறப்படும் புனைவு ஒன்றின் அடிப்படை யில் இந்த பாரம்பரியம் தொடங்கியி ருக்கலாம். ஆண்கள் தங்கள் திருமண விருப்பத்தைத் தெரிவிக்க வெகு நாட்கள் எடுத்துக் கொள்வதால் பெண்கள் நீண்ட காலம் காத்திருக்க வேண்டியுள்ளது என தூதர் பிரிட்ஜெட், தூதர் பாட்ரிக்கிடம் புகார் செய்தார். எனவே திருமண விருப் பத்தை வெளிப்படுத்த பெண்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அவர் கோரினார் என்று அந்தப் புனைவு அமைந்துள்ளது.

பெண்ணின் திருமண விருப்பம் நிராக ரிக்கப்படும்போது, செய்ய வேண்டிய சில சடங்குகளும் உள்ளன. பெண்ணின் விருப்பத்தை ஆண் நிராகரித்துவிட் டால், அந்தப் பெண்ணுக்கு பட்டாடை கள் மற்றும் கையுறைகள் வாங்கித் தர வேண்டும்.

சில பாரம்பரியங்களின்படி, மிகு நாள் துர்திருஷ்டவசமானதாகக் கருதப் படுகிறது. கிரேக்க நாட்டில், மிகுநாள் ஆண்டில் திருமணம் செய்து கொள்ளப் படுவது தவிர்க்கப்படுகிறது. அதுவும் குறிப்பாக, மிகுநாளில்.

மிகுநாள் ஆண்டில் செய்யப்படும் திருமணம் முறிந்துவிடும் என்று அங்கு நம்பப்படுகிறது.

ஸ்காட்லாந்து நாட்டில், மிகுநாளில் தீங்கு விளைவிக்கும் மந்திரவாதிகள் ஒன்று கூடுவதாக நம்பப்படும் பாரம் பரியம் உள்ளது.

பிப்ரவரி 29ஆம் தேதி குழந்தை பிறப் பதையும் துர்நிகழ்வாக ஸ்காட்லாந்து மக்கள் சிலர் கருதுகின்றனர்.

ஆனால் சில கலாசாரங்களின்படி, மிகுநாள் ஆண்டை அதிர்ஷ்டமானதாக பார்ப்பதும் உண்டு.





சில ஜோதிடர்கள், உங்கள் பிறந்த நாள் மிகுநாளாக இருந்தால், நீங்கள் பல சிறப்பான திறமைகள் கொண்டவராக இருப்பீர்கள் என்று நம்புகிறார்கள்.

**மிகுநாள் ஏன் பிப்ரவரி மாதத்தில் உள்ளது?**

மிகு நாள் ஏன் பிப்ரவரி மாதத்தில் அமைகிறது என்பதற்கான காரணத்தை அறிந்துகொள்ள, பண்டைய ரோம நாட்டில் ஜூலியஸ் சீசர் நாட்காட்டி சீர்திருத்தங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஜூலியன் நாட்காட்டியை சீசர் அறி முகப்படுத்தினார். சூரிய நாட்காட்டியு டன், வழக்கமான நாட்காட்டி ஒன்றாக இருக்க வேண்டும் என்பதால், மிகுநாள் ஆண்டு சேர்க்கப்பட்டது.

ஜூலியன் நாட்காட்டி, கிரிகோரியன் நாட்காட்டியாக 1852ஆம் ஆண்டு மேம் படுத்தப்பட்டது. எனினும், பிப்ரவரி மாதத்தில் ஒரு மிகுநாள் சேர்க்கப்படும் பாரம்பரியம் மாறவில்லை.

நாம் மிகுநாள் ஆண்டுகளைக் கடைப் பிடிக்காமலும், நாட்காட்டிகளுக்கு இடையே உள்ள சுமார் ஆறு மணி நேரத்தைக் கணக்கில் எடுக்காமலும் இருந்தால், பருவ காலங்கள் தடம் மாறிவிடும்.

உதாரணமாக, சுமார் 700 ஆண்டு களுக்குப் பிறகு, வடக்கு அரைக்கோளத் தில் கோடைக்காலம் ஜூன் மாதத்திற் குப் பதிலாக டிசம்பரில் தொடங்கும்.

நாம் மிகுநாள் ஆண்டுகளைக் கடைப்பிடிக்காமல் இருந்தால், வடக்கு அரைக்கோளத்தில் ஒரு கட்டத்தில் ஜூன் மாதத்தில் குளிர்காலம் நிலவும், அதேநேரத்தில் தெற்கு அரைக்கோளத் தில் கோடைக்காலம் நிலவும்.

பலரும் மிகுநாள் ஆண்டுகள் ஒவ் வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகின்றன என்று நினைக்கிறார்கள். ஆனால் அது எப்போதும் உண்மை இல்லை.

இதற்குக் காரணம், ஓர் ஆண்டின் துல்லியமான நீளம் (நாட்கள், மணி நேரங்கள், நிமிடங்கள், விநாடிகள்) நமது நாட்காட்டியின் ஆண்டின் நீளத் திற்குச் சரியாகப் பொருந்தாததுதான். ஓர் ஆண்டின் துல்லியமான நீளம் 365.242222 நாட்கள். ஆனால் நமது நாட்காட்டியில் 365 நாட்கள் மட்டுமே இருக்கின்றன.

இந்தக் குறைபாட்டை சரிசெய்வதற் காகத்தான் மிகுநாள் ஆண்டுகள் இருக் கின்றன. அவற்றின் விதி என்னவென் றால், ஓர் ஆண்டை நான்கால் வகுத்து மீதி இல்லாமல் வந்தால் அது மிகுநாள் ஆண்டாகும்.

இதற்கு ஒரு விதிவிலக்கு: நூற்றாண் டுகள். 100ஆல் வகுத்து மீதி இல்லாமல் வரும் ஆண்டுகள் மிகுநாள் ஆண்டுகள் அல்ல. ஆனால், 400ஆல் வகுத்து மீதி இல்லாமல் வரும் நூற்றாண்டுகள் மிகுநாள் ஆண்டுகள் ஆகும்.

சுருக்கமாகச் சொன்னால், மிகுநாள் ஆண்டுகள் ஒவ்வொரு நான்கு ஆண்டு களுக்கும் ஒருமுறை வராது. 100ஆல் வகுத்து மீதி இல்லாத ஆண்டுகளைத் தவிர்த்து, மீதமுள்ள நான்கு ஆண்டு களில் ஒன்று லீப் ஆண்டாக இருக்கும். நூற்றாண்டுகளில் 400ஆல் வகுத்து மீதி இல்லாதவை மட்டுமே மிகுநாள் ஆண்டுகள்.

சில எளிமையான உதாரணங்களைக் கொண்டு விளக்கலாம்.

2000ஆம் ஆண்டு ஒரு மிகுநாள் ஆண்டாக இருந்தது. ஏனென்றால் அந்த ஆண்டை 4 மற்றும் 400ஆல் வகுத்தால் மீதி இல்லாமல் வந்தது.

ஆனால், 1700, 1800, 1900 ஆண்டுகள் 4ஆல் வகுத்தாலும் 400ஆல் வகுத்தால் மீதி வந்தது. ஆகையால் அவை மிகுநாள் ஆண்டுகள் அல்ல.

அடுத்த முறை மிகுநாள் ஆண்டு தவிர்க்கப்படும் ஆண்டு 2100 ஆகும்.

# சனத் நிசாந்தவின் அகால மரணமும் பொதுவெளியில் பிரதிபலிப்புக்களும்



வீரகத்தி தனபாலசிங்கம்

“சனத் நிசாந்த் அவர் நினைவு கூரப்படுவாரா?“

இது கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் தலைப்புச் செய்தி. எமது நினைவுக்கு எட்டிய கடந்த காலத்தில் இலங்கையில் எந்தவொரு அரசியல்வாதியின் மரணத்தையும் அடுத்து இவ்வாறான ஒரு தலைப்புடன் செய்தி வந்ததாக நாம் அறியவில்லை.


நீர் விநியோக இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த குருநாகலிலும் சிலாபத்திலும் இரு திருமண வைபவங்களில் கலந்துகொண்டுவிட்டு வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை ஊடாக கொழும்பு திரும்பிக்கொண்டிருந்தவேளை அவரது ஜீப் கொள்கலன் வாகனம் ஒன்றை முந்திச்செல்ல முயன்றபோது இடம்பெற்ற கோர விபத்தில் அவரும் மெய்க்காவலரான பொலிஸ் கான்ஸ்டபிளும் பலியானார்கள்.

கடுமையான வேகத்தில் ஜீப்பை ஓட்டிச் சென்றதாகக் கூறப்படும் சாரதி ராகம பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். நிசாந்தவின் இறுதிச்சடங்கு இன்று நடைபெறுகிறது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான நிசாந்த முதன்முலாக 2015 ஆகஸ்ட் பொதுத்தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவானார். ராஜபக்சாக்களின் அதிவிசுவாசியான நிசாந்த அவர்களைப் பாதுகாப்பதில் மாத்திரமல்ல பாராளுமன்றத்தில் சபையின் நடுவில் இறங்கி குழப்பம் விளைவிப்பதிலும் முன்னணியில் விளங்கினார். அதற்காக ஒரு தடவை சபாநாயகரிடம் மன்னிப்புக் கோரிய அவர் இம்மாத முற்பகுதியில் இரு வாரங்களுக்கு சபை நடடிக்கைகளில் பங்கேற்க முடியாதவாறு இடைநிறுத்தமும் செய்யப்பட்டார்.

பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு எதிராக குறிப்பாக ராஜபக்சாக்களுக்கு எதிராக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரச்சினை கிளப்பிப் பேசும்போது அவர்களுக்கு அதிகமான தடவைகள் இடையூறு செய்தவராகவும் சனத் நிசாந்த தனக்கொரு (அவப்) பெயரைச் சம்பாதித்து வைத்திருந்தார்.

வன்முறைகளில் ஈடுபடும் குற்றவாளிகளை சில நீதிபதிகள் விடுதலை செய்கிறார்கள் என்று பொதுஜன பெரமுன தலைமையகத்தில் செய்தியாளர்கள் மகாநாட்டில் ஒரு தடவை கூறியதற்காக நிசாந்த மீது தொடுக்கப்பட்ட நீதிமன்ற





அவமதிப்பு வழக்கு விசாரணையில் இருக்கிறது.

சில வருடங்களுக்கு முன்னர் புத்தளம் மாவட்டத்தில் ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளரை தனது சகோதரருடன் சேர்ந்து நிசாந்த தாக்கிய குற்றச்சாட்டில் சிலாபம் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றும் இருந்தது.

2022 மே 9 ஆம் திகதி அன்றைய பிரதமர் மகிந்த ராஜபக்ச தனது ஆதரவாளர்களை அலரிமாளிகையில் இருந்து காலிமுகத்திடல் “கோட்டா கோ கம” போராட்டக்காரர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டபோது அந்த தாக்குதல்களுக்கு நிசாந்த தலைமை தாங்கியதாக குற்றச்சாட்டப்பட்டது. அமைதிவழிப் போராட்டக்காரர்கள் மீது அரசாங்க ஆதரவுக் குண்டர்கள் தாக்குதலை தொடங்குவதற்கு முன்னதாக இன்றைய பதில் பொலிஸ்மா அதிபருடன் நிசாந்த கதைத்துக்கொண்டு நின்றதைக் காண்பிக்கும் காணொணி அன்று சமூக ஊடகங்களில் வெகு தீவிரமாகப் பரவியது.

அந்த தாக்குதலுக்கு பதிலடியாக நாட்டின் பல பாகங்களிலும் மூண்ட வன்முறைகளில் அரசாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் வீடுகளுக்கும் உடமைகளுக்கும் தீவைக்கப்பட்டது. அதில் நிசாந்தவின் வீடும் எரிந்து நாசமானது.

புத்தளத்தில் இருந்த அவரது வீடு எரிக்கப் பட்டிருக்காவிட்டால் கடந்த வியாழக்கிழமை அவர் அதிவேக நெடுஞ்சாலை ஊடாக கொழும்புக்கு வரவேண்டியேற்பட்டிருக்காது. விபத்தில் அநியாயமாக பலியாகியும் இருக்கமாட்டார் என்று ஓர் அமைச்சர் கூறயதையும் காணக்கூடியதாக இருந்தது.

ராஜபக்சாக்களின் தவறான ஆட்சி முறையின் விளைவாக மூண்ட பொருளாதார நெருக்கடியில் சொல்லொணா அவலத்தை அனுபவித்த மக்கள் மீது கொஞ்சமேனும் இரக்கம் காட்டாமல் தனது அரசியல் ஆசான்கள் மீதான விசுவாசத்தை வெளிக்காட்டுவதற்கு காலிமுகத்திடல் காடைத்தனத்துக்கு நிசாந்த தலைமை தாங்கியதை சாதாரண மக்கள் எந்தளவு வன்மத்துடன் மனதில் வைத்திருக்கிறார்கள் என்பதை அவரின் அகால மரணத்துக்கு பிறகு பொது வெளியில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களும் சமூக ஊடகங்களில் நிரம்பிவழியும் பதிவுகளும் பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன.

நிசாந்த அரசியலுக்கு வந்த பிறகு நடந்தவற்றைத் தான் நாம் அறிந்து வைத்திருக்கிறோம். அதற்கு முதல் அவரின் நடத்தைகள் எவ்வாறு இருந்திருக்குமோ? பணபலமும் அடியாள் பலமும் இன்று இன்றியமையாததாக இருக்கின்ற இன்றைய அரசியலுக்கு அவர் எதற்காக, எவ்வாறு அழைத்துவரப்பட்டிருப்பார் என்பதைப் புரிந்துகொள்வதில் எவருக்கும் சிரமம் இருக்காது. அரசியலில் தனது தேவையை தனக்குரித்தான முறையில் நடத்தைகள் மூலம் அவர் நிரூபித்துக்காட்டிச் சென்றிருக்கிறார்.

48 வயதான நிசாந்தவின் அகால மரணம் அவரது இளம் மனைவியினாலும் நான்கு பெண் பிள்ளைகளினாலும் தாங்கிக்கொள்ளவே முடியாதது. அவரின் மரணத்தினால் ஏற்பட்ட வெற்றிடம் பொதுஜன பெரமுனவினால் கடுமையாக உணரப்படலாம். துரதிர்ஷ்டவசமாக, அவரது அரசியல் வாழ்வு பெரும்பாலும் எதிர்மறையான காரணங்களுக்காகவே நினைவுகூரப்படப்போகிறது. அதை தங்களுக்கான ஒரு பாடமாக அரசியல்வாதிகள் எடுத்துக்கொள்வார்கள் என்பது சந்தேகமே.

பொதுவில் நாம் இறந்தவர்களைப் பற்றி கெடுதியாகப் பேசுவதில்லை. அந்தப் பண்பை அல்லது சம்பிரதாயத்தையும் மீறி நிசாந்தவின் மரணத்தை மகிழ்ச்சியாக நோக்கி பலரும் கருத்து வெளியிடும் அளவுக்கு அவரது அரசியல் நடத்தைகள் பரந்தளவில் மக்கள் மத்தியில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

“மரணத்தைக் கொண்டாடுவது ஒரு வித மனப்பிறழ்வு என்று உணர்ந்தாலும் கூட நிசாந்தவின் மரணத்தை உள்மனம் ஏன் கொண்டாடுகிறது?

“அவர் கடந்த இரு தசாப்த காலமாக இலங்கை மக்களின் அவலங்களுக்கு நேரடியாகக் காரணமாக இருந்த அதிகாரக் கும்பலின் முக்கியமான விசுவாசி. வெளியில் மட்டுமல்ல பாராளுமன்றத்திலும் நிசாந்த சண்டியன்.

“கடந்த வாரம் பாராளுமன்றத்தில் இணையவெளி பாதுகாப்புச் சட்டத்தை அடாவடித்தனத்தோடு அரசாங்கம் நிறைவேற்றியபோது சபையின் மத்தியில் இறங்கி நிசாந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் சண்டித்தனத்தில் இறங்கியதையும் காணக்கூடியதாக இருந்தது. இத்தகைய அரசியல்வாதிகளின் அழிவில் என்ன இரங்கல் எமக்கு இருக்கிறது? சமூக ஊடகங்களில் இந்த வாகன விபத்தைக் கொண்டாடும் பதிவுகளே போதும் மக்களின் உள்மனதை அறிந்துகொள்வதற்கு” - இது ஸ்கண்டிநேவிய நாடொன்றில் வசிக்கும் இலங்கை இளைஞர் ஒருவர் முகநூலில் செய்த பதிவு.

“நிசாந்தவின் அகால மரணத்துக்கும் மக்கள் மத்தியில் பரந்தளவில் மகிழ்ச்சி வெளிப்பாடு மற்றும் கர்மா பற்றிய பேச்சுக்களுக்கும் என்ன தொடர்பு?

“சட்டத்தின் ஆட்சியை மதிக்காமல் செயற்படுதல், சட்டத்தில் இருந்து விடுபாட்டு உரிமையைப் பெற்றுக்கொண்டவர்கள் போன்று குற்றச் செயல்களில் ஈடுபடுதல், அதிகார துஷ்பிரயோகம், உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் நீதி நிவாரணத்தைப் பெறமுடியாத அளவுக்கு அரசியல் செல்வாக்கு பிரயோகிக்கப்படுதல்.... என்று பெருவாரியான காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

“அரசும் அரசியல்வாதிகளும் மக்களை வதைக்கின்ற, அரசாங்க நிறுவனங்கள் மக்களுக்கு சேவை செய்யாத சமுதாயங்களில், மக்களின் துன்பங்களுக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)



# கனடாவில் தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வுகள்

**குரு அரவிந்தன்**

கனடாவில் தமிழ் மரபுத்திங்கள் நிகழ்வுகளும், தைப் பொங்கல் நிகழ்வுகளும் ஆரம்பமாகி, வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுவதைப் பார்க்க முடிந்தது. பொதுவாக ஜனவரி மாதம் இங்கே பனி கொட்டிக் கொண்டிருந்தாலும், தமிழர்களின் பாரம்பரிய கொண்டாட்டம் என்பதால் பின்வாங்காது பலரும் கலந்து நிகழ்வைச் சிறப்பித்த வண்ணம் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

நீதன் சண் அவர்களால் முன்மொழியப்பட்ட இந்த தமிழ் பாரம்பரிய மாதம், 2010 ஆம் ஆண்டு கனடாவில் தொடங்கப்பட்டது, இதைத் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டு ஹரி ஆனந்தசங்கரியால் கொண்டவரப்பட்ட பிரேரணை கனடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இம்முறை தமிழ் மரபுத்திங்கள் நிகழ்வுகளைத் தமிழர்களின் அதிக நிறுவனங்கள் கொண்டாடியிருந்தன. இதுவரை தைப்பொங்கள் விழாவாகக் கொண்டாடியவர்கள் சிலர் இதை இப்போது மரபுத்திங்கள் விழாவாக மாற்றி இருந்தார்கள். சில நிறுவனங்களுக்கு இப்படியான கொண்டாட்டங்களுக்கு அரசநிதி கிடைப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். சில இடங்களில் தங்களுடைய செல்வாக்கைக் காட்டத் தனித்தனியாக விழா எடுத்துத் தங்களுக்குத் தேவையானவர்களை மேடையில் ஏற்றி, இணையத்தளங்களில் படங்களைப் போட்டு அதன் மூலம் தங்களைப் பிரபலமாக்கச் சிலர் முயற்சித்திருப்பதும் வெளிப்படையாகத் தெரிந்தது. இவர்களுக்கு மத்தியில் அகப்பட்டு மூச்சுத் திணறியவர்கள் பெரும்பாலும் பல்லினம் சார்ந்த அரசியல் பிரமுகர்களாகத்தான் இருந்தார்கள்.

இனிவரும் காலத்தில் தைப்பொங்கல் என்ற



தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வு கனடிய மண்ணில் மெல்ல மெல்ல மறைந்து போய்விடுமோ என்று சில நிகழ்வுகளைப் பார்த்தபோது தோன்றியது. ஒரு சிலர் மட்டும் பொங்கலையும், மரபுத்திங்களையும் ஒன்றாகச் சேர்த்து கொண்டாடினார்கள். ஏனையோர் பெரிய பதாகைகள் செய்து மரபுத்திங்களை மட்டும் கொண்டாடினார்கள். ஒரு காலத்தில் தமிழர்களின் மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் தூய தமிழில் தேவாரம் ஓதப்பட்டே ஆரம்பமாகின. இடையிலே பல காரணங்கள் சொல்லப்பட்டு தேவாரம் ஓதும்முறை இப்போது அனேகமாகத் தவிர்க்கப்பட்டு விட்டது.

நிகழ்வு ஒன்றில் சந்தித்த இலக்கிய நண்பர் ஒருவர் 'சர்வதேசம் திரும்பிப் பார்க்கக்கூடியதாக இவர்கள் ஏன் பெரிய அளவில் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து மரபுத்திங்களை ஒரு விழாவாகக் கொண்டாடக்கூடாது' என்று தனது ஆதங்கத்தை முன்வைத்தார். அவர் கேட்டதில் நியாயம் இருந்தது. ஆனால் இதற்குப் பின்னால், ஒற்றுமை, நிதிப்பங்களிப்பு, கலைஞர்களின் பங்களிப்பு, அரங்கம், சுயலாபம் தேடும் அரசியல் என்று பல விடயங்கள் இருக்கின்றன. 2009 ஆம் ஆண்டுக்குப்பின் இப்படியான தமிழ் மெழி சார்ந்த விடயங்களைப் பெரிய அளவில் முன்னெடுக்க இங்கே யாரும் முன்வரவில்லை என்பதுதான் உண்மை.

ஒன்ராறியோவின் பல பகுதிகளிலும் இருந்து வந்து 'வோன்' பகுதியில் புதிதாகக் குடிபுகுந்த தமிழர்கள் முதன் முதலாக 'வோன் தமிழ் பண்பாட்டு அமைப்பு' என்ற பெயரில் அன்பழகன் குமாரசாமியின் தலைமையில் தமிழ் மரபுத் திங்களைக் கொண்டாடியிருந்தனர். பல அமைப்புகளில் செயற்படுவதாலும், வோன் குடிமகன் என்பதாலும் எனக்கும் அழைப்பு வந்தது. எல்லோருக்கும் சர்க்கரைப் பொங்கல் கொடுத்தார்கள். வோன் மேயர் ஸ்ரீவன் டெல்டூகா, ஹரி ஆனந்தசங்கரி, நீதன் சண், விஜய் தணிகாசலம், பார்த்தி கந்தவேள், அனு சிறீஸ்கந்தராஜா போன்றவர்களுடன் நட்புரீதியாக உரையாட முடிந்தது. அரசியல் சார்ந்தவர்கள்தான் மேடையில் அதிகம் நின்றார்கள். கலை நிகழ்ச்சிகள் தரமானவையாக இருந்தன, இளைய தலைமுறையினர் அதிக அளவில் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தது பாராட்டுக்குரியதாக இருந்தது. இது போன்ற சில நிகழ்வுகளில் இளையதலைமுறையினர் எங்கள் ஆதங்கத்தைப் புரிந்து கொண்டு செயற்பட்டதால் இங்கே 'தமிழ் வாழும்' என்ற நம்பிக்கை துளிர்த்தது.







---




# வியுக்தியார் பதில்கள்

**செல்வா. கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்**

**கேள்வி:** நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை இலங்கை நிறைவேற்றியமைக்கு கவலை வெளியிட்டுள்ள அமெரிக்கா, வெளிப்படைத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்குமாறும் எந்தவொரு சட்டமும் மக்களின் குரல்களை நசுக்காமல் இருப்பதை உறுதி செய்யுமாறும் வலியுறுத்தியுள்ளதே?.

**வியுக்தியார்:** மற்றைய நாடுகளின் மனித உரிமை விடயத்திலும், சட்டங்கள் தொடர்பிலும் கரிசனை காட்டும் அமெரிக்கா, தனது நாட்டில் நீதித்துறையில் என்ன நடக்கின்றது என்பதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அமெரிக்காவில் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டு சிறையிலிருந்து வெளியேவந்த ஈழத்தமிழ் செல்வந்தரான ராஜ். ராஜரட்ணம் எழுதியுள்ள 'சமனற்ற நீதி' என்ற நூலை அமெரிக்க தூதுவர் ஒருதடவை வாங்கிப் படித்துப்பார்க்க வேண்டும்.

---

**க. தில்லைநாதன், மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** 13ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள் போதாது என்றும், கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றன. 13ஆவது திருத்தம் இன்று நலினமடைந்திருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால், 13ஆவது திருத்தத்தில் தற்போது குறிப்பிடப் பட்டுள்ள அதிகாரங்களைக்கூட தமிழ்க் கட்சிகள் உரிய முறையில் சரிவரப் பயன்படுத்தவில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** 13வது திருத்தம் இன்று நலிவடைந்திருக்கின்றது என்பது உண்மைதான் என்று அவர் ஒரு உண்மையை ஏற்றுக்கொள்ளும்போது, நாமும் அவர் சொல்கின்ற இன்னுமொரு உண்மையையும் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது, நமது வடக்கு முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் முதலமைச்சராக பதவியேற்ற சில நாட்களில் 'தன்னை கால்கள் முறிந்த கதிரையில்' உட்கார வைத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருந்தார். அவர் சொன்னது சரியா என்பது தெரியவில்லை, ஆனால் மனுசன் ஐந்து வருடங்களும் அந்த முறிந்த கால்களுடன் உள்ள கதிரையில்தான் அமர்ந்திருந்தார்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** 2009ஆம் ஆண்டுக்கு முன்னையது போன்ற தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை மீண்டும் உருவாக்குவதற்கு எத்தனை விட்டுக் கொடுப்புகளையும் - தியாகங்களையும் செய்யத் தயாராக உள்ளேன் - என்று இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கின்றது?. மனுசன் இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டுக்கு முந்திய கூட்டமைப்பு என்றுதானே சொல்லியிருக்கிறார். அதாவது தமிழ் காங்கிரஸ் (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) கட்சியையும் சேர்த்த கூட்டமைப்பைத்தான் அவர் சொல்கிறார். அது நடக்காது என்பது அவருக்கு தெரிந்ததால்தான், எந்த விட்டுக்கொடுப்புக்கும் தயார் என்கிறார் போலும். நமது ரணில் தமிழ் கட்சிகள் எல்லாம் ஒற்றுமையாக வந்தால் தீர்வு தருகின்றேன் என்று சொல்வதுபோலத்தான் இதுவும்.

---

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளாராமே?. இந்த பதவி இவ்வளவு முக்கியான பதவிகளில் ஒன்று என்கிறாரா?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றும் இல்லை. இப்படி வாழ்த்து தெரிவித்திருப்பதன் மூலம் - அதுகும் உகண்டாவில் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அங்கிருந்தவாறே வாழ்த்துத் தெரிவித்திருப்பது பல விடயங்களை உணர்த்தியிருக்கின்றது. அவர் இந்த தேர்தல் முடிவு எப்படி வரும் என்பதை அறிய ஆவலுடன் இருந்திருக்கிறார் என்பது முதலாவது. இரண்டாவது, ஒருவரை வாழ்த்துவதன் மூலம் இன்னுமொருவரை கோபப்படுத்த நினைத்தாரோ தெரியவில்லை.

---

**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமையாக செயல்படவேண்டும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தம்மைச் சந்தித்த தமிழ் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்தியுள்ளாராமே?. இவர்கள் ஒற்றுமைப்படுவார்கள் என்று அவருக்காவது நம்பிக்கை இருப்பது ஆறுதலளிக்கவில்லையா உங்களுக்கு?

**வியுக்தியார்:** அனைத்துகட்சிகளும் ஒற்றுமையாக செயல்படவேண்டும் என்று அவர் ஆலோசனை சொல்வதற்குக்கூட கட்சித் தலைவர்களை மாத்திரம் அழைக்கவில்லை என்பதைக் கவனித்தீர்களா? ஒரே கட்சியிலிருந்த பலரை அவர் அழைத்ததே, கட்சித் தலைவர்கள் ஒற்றுமைப்பாட விரும்பினாலும் கட்சியில் உள்ள மற்றையவர்கள் விடமாட்டர்கள் என்பதால் தானே அவர் எல்லோரையும் அழைத்திருக்கிறார். இதிலிருந்து அவருக்கே இந்த விடயத்தில் நம்பிக்கை இல்லை என்பது தெரியவில்லையா?

# ஆஸி பூர்வகுடிகள் இழந்த தேசம் : அபரோஜின வாக்கெடுப்பு தோல்வி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கடந்த வருடம் அக்டோபர் 14இல் இடம்பெற்ற பொது வாக்கெடுப்பில் 60 வீதத்திற்கு மேற்பட்ட அவுஸ்திரேலியர்கள் பழங்குடியினருக்கான சிறப்பு அமைப்பை ஆதரிக்கவில்லை.

பழங்குடியினர் தொடர்பான பொது வாக்கெடுப்புத் தோல்விக்குப் பொறுப்பேற்றுக் கொண்டார் அவுஸ்திரேலியப் பிரதமர்.

பிரதமர் ஆண்டனி அல்பனிஸ், பழங்குடியினருக்கான சிறப்பு அமைப்பை உருவாக்குவது தொடர்பில் நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பின் தோல்விக்குத் தானும் பொறுப்பேற்றுக் கொள்வதாகக் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மக்கள்தொகை 26 மில்லியன் ஆகும். இதில் பழங்குடி அவுஸ்திரேலியர்கள் சுமார் 3 வீதம் மட்டுமே இருக்கிறார்கள். ஆனால் அதிகாரப்பூர்வ தரவுகள், இந்நாட்டின் சிறைவாசிகளில் கால் பகுதி இவர்களை கொண்டது என்றும், சிறிய குற்றங்களுக்காகவே பலர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் அபோரிஜின பழங்குடியின உரிமையும், கடந்த ஐம்பது ஆண்டுகளாக வெற்றிகரமான வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை என்பதும் உண்மையே.

**பழங்குடியின மக்கள் அபோரிஜினர்**

அவுஸ்திரேலியாவில் பல நூற்றாண்டுகளாக வாழும் பழங்குடியின மக்கள் அபோரிஜின்ஸ். இவர்களுக்கு இதுவரை அரசியலமைப்பு ரீதியாக அங்கீகாரம் கிடைக்கவில்லை. இதனால் தேசிய கொள்கை வகுப்பில் எந்த பங்களிப்பும் இன்றி இருந்து வருகின்றனர்.

அதை மாற்றும் முயற்சியின் முதல் படியாக, பழங்குடியின மக்கள் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவில் வசிக்கும் மக்களுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் வழங்கவேண்டுமா, என்பதை தீர்மானிக்க இந்நாட்டு மக்களிடையே இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

**அவுஸ்திரேலியா தினம் - 26 ஜனவரி**

அவுஸ்திரேலியா தினம் (Australia Day) “26 ஜனவரி” என்பது இந்த நாட்டின் பாரம்பரிய விழுமியங்கள், சுதந்திரங்கள் மற்றும் பொழுது போக்குகளைக் கொண்டாடும் ஒரு நாள் என்றுதான் உலகிற்குத் தெரியும்.

ஆண்டு தோறும் அவுஸ்திரேலியா தினம், பரவலாக மக்கள் மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறிவிட்டாலும், குறிப்பாக அபரோஜின பூர்வீக குடி மக்களுக்கு வேதனையளிக்கிறது. அதனைக் கொண்டாடுவது ஏன் அவர்களிடத்தில் துக்கத்தை ஏற்படுத்துகிறது பற்றிய வரலாற்று அலசலாக இக் கட்டுரை பிரசுரமாகிறது.




ஆயினும் பல பூர்வீக குடி மக்களுக்கு, இந்த நாள் மிகவும் வித்தியாசமான உணர்வுகளை உண்டாக்குகிறது. பிரித்தானிய காலனித்துவ படையெடுப்பின் தொடக்கத்தைக் குறிக்கும் இந்த நாள் பலருக்கும் துக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்தப் படையெடுப்புகளின் விளைவாக போர், இனப்படுகொலை, இன வெறி மற்றும் பூர்வீக குடி மக்களுக்கு எதிரான பிற அட்டூழியங்கள், பல தலைமுறைகளாக நடந்ததை, நடப்பதை நினைவுபடுத்தும் நாளாக அமைந்துள்ளது.





ஐரோப்பியரோ சீனரோ கால் வைக்க முன்னமிருந்தே கிட்டத்தட்ட 45000-60000 ஆண்டுகளுக்கும் மேலாக பழங்குடியின அபரோஜின மக்கள் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார்கள்.

இதுவரையிலான கணிப்புகளின்படி அவுஸ்திரேலியாவில் 60000 ஆண்டுகளுக்கு முன் முதல் மனித இனம் காலடி எடுத்து வைத்தது. அதன் பிறகே அவுஸ்திரேலியாவுக்குள் 18ம் நூற்றாண்டில் தான் ஐரோப்பியர்கள் நுழைந்தனர். இடைப்பட்ட காலத்தில் அவுஸ்திரேலியா தனித்திருந்தது. எந்த இனக் கலப்பும் நடக்கவில்லை, வேறு யாருமே நுழையவில்லை என்றும் நம்பப்பட்டு வந்தது.

இந்தப் பழங்குடியினர் எல்லாருமே ஒரே மொழியைப் பேசுபவர்களல்லர். ஐரோப்பியக் குடியேற்றத்துக்கு (1788) முன்பு இவர்கள் 700 மொழிகளை பேசி வருகின்றனர். அவற்றுள் கூறி, முர்ரி, நுங்கர், யமாட்ஜி, வங்காய், அனங்கு, யாப்பா, யொல்ங்கு, பலவ ஆகியன பேச்சு வழக்கு மொழிகளாகும்.

அபரோஜின பழங்குடியினர் - அவுஸ்திரேலிய நிலப்பரப்பில் வாழ்வோர், ரொறஸ் நீரிணைத் தீவுக்காரர் (Torres Strait Islanders) என இரு வகையாகப் பிரிக்கலாம்.

ரொரஸ் நீரிணை தீவுகள் பப்புவா நியூகினிக்கும் அவுஸ்திரேலியப் பெரு நிலப்பரப்பின் வடமுனைக்கும் இடைப்பட்ட தீவுகளாகும்.

ஐரோப்பியரால் ஆக்கிரமிக்கப்பட்ட அபரோஜின பழங்குடியினரின் பூர்வீக அவுஸ்திரேலிய நிலப்பரப்பில் பரவிய அம்மை, சின்னம்மை, காசநோய், இருமல், மற்றும் சுவாச நோய்த் தாக்குதலுக்கு அதிகளவில் இப்பூர்வீக மக்கள் பாதிக்கப்பட்டு அதிகளவில் இறந்தார்கள். அதே வேளை வெள்ளையர்களாலும் இந்த மக்கள் அழிக்கப்பட்டார்கள். குறிப்பாக “வேட்டையாடி”யதில் தஸ்மேனியாவிலிருந்த ஒரு பழங்குடி இனமே முழுமையாக அழிக்கப்பட்டது.

1950ம் ஆண்டு வரை பெற்றோரில் ஒருவர் வெள்ளையராயும் மற்றவர் பழங்குடியினராயும் இருந்து பிறக்கும் கலப்புப் பிள்ளைகளை பலவந்தமாக இதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட நிலையங்களில் அரசே சேர்த்துவிடும். பழங்குடியினரில் இப்படிக் கொண்டு செல்லப்பட்ட குழந்தைகள் “களவாடப்பட்ட தலைமுறை” (stolen generation) என அறியப்படுகின்றனர். இதனைப் பற்றிய அயர வைக்கும் உண்மைக்கதை சொல்லும் படம் “Rabbit Proof Fence” துயர வரலாற்றின் முக்கியமான சான்றாகும்.

**அபரோஜின மண்ணில் அத்து மீறிய ஆக்கிரமிப்பு**

காலனித்துவ அந்நியர்களின் ஆக்கிரமிப்பு இல்லாமல், அமைதிப் பூங்காவாக இருந்த அவுஸ்திரேலியா கண்டத்திற்கு 1770-ல் காப்டன் குக் (Captain Cook) என்பவர்தான் இக்கண்டத்தை கண்டு பிடித்து உலகிற்கு அறிமுகம் செய்தார் என ஆங்கிலேயர் வரலாற்று ஏடுகளில் பறை சாற்றுகின்றனர்.

அதன் பின்னரே அவுஸ்திரேலியா கண்டத்தை பிரித்தானியர்கள் சொந்தம் கொண்டாடி முழுமையாக ஆக்கிரமித்தனர். இதனை உறுதி செய்யும் விதமாக அவுஸ்திரேலிய நிலப்பரப்பை “யாருமற்ற இடம் (Terra Nullium)” என பிரகப்படுத்தினார்கள்.

**கறுப்பு யுத்தமும் இனப்படுகொலையும்**

1834 இல் பிஞ்சாரா என்ற இடத்தில் இனப்படுகொலையின் ஆரம்பமாக 80 க்கும் மேற்பட்ட அபரோஜினியரை சுட்டுக் கொன்றனர். தஸ்மானியா மாநிலத்தில் குடியேறிய ஆங்கிலேயர்கள் 10,000 க்கும் மேற்பட்ட அபரோஜினியரை கொன்று குவித்தனர்.

கொடூரமாக நீர் நிலைகளில் நஞ்சை கலந்து வைத்தனர். ஆங்கிலேயர்களால் மாவில் விஷம் வைத்து அபரோஜினியருக்கு விநியோகித்து அவர்களை அழித்தனர். இதனை சரித்திர ஆசிரியர்கள் “கறுப்பு யுத்தம்” என பதிவு செய்துள்ளனர்.

**அரசின் மன்னிப்பு கோரல்**

களவாடப்பட்ட தலைமுறையினர் குறித்தும், அபரோஜின பழங்குடியின மக்கள் மீதான படுகொலைக்காக அன்றைய அவுஸ்திரேலிய பிரதமர் கெவின் ரெட் (Kevin Rudd), 13.02.2008 அன்று கான்பெரா தலைநகர் பாராளுமன்றில் தனது உரை மூலமாக பொது மக்களிடம், பொது மன்னிப்பு கேட்டு இருபது நிமிடங்கள் உரையாற்றினார். இதுவே முதன்முறையாக பழங்குடி பொது மக்களிடம் கேட்ட பொது மன்னிப்பாகும்.





# கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பி மீண்டும் கைதான 34 பேருக்கு மறியல்

கொழும்பு, ஜன. 28

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பிச்சென்றவர்களில் மீண்டும் கைது செய்யப்பட்ட 34 கைதிகளும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலனறுவை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமறைவாகியுள்ள 13 கைதிகளைத் தேடி தொடர்ந்தும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.



கடந்த 24 மணித்தியாலங்களில் புனர்வாழ்வு நிலையத்தில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலின் பின்னர் 47 கைதிகள் தப்பிச்சென்றனர்.

இந்த மோதலில் காயமடைந்த மூவரில் இருவர் வெலிகந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தற்போது 358 கைதிகள் உள்ளனர்.

இவர்களில் யுக்திய சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு புனர்வாழ்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டவர்களும் உள்ளடங்குவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி கூறினார். (அ)

# கிராம உத்தியோகத்தர் தேர்வு முடிவு வெளியானது

கொழும்பு, ஜன. 28

டிசெம்பர் 2, 2023 அன்று நடைபெற்ற கிராம உத்தியோகத்தர் தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சை திணைக்களம் வழங்கிய பிரதேச செயலகப் பிரிவுகளின்படி நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெற்ற 4232 பேரின் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moha.gov.lk இல் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

இந்த பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் 2002 கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளதாகவும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார். (அ)

# வரி செலுத்தாத 10 மதுபான நிலையங்களின் உரிமங்களை இரத்துச் செய்யக் கோரி மனு!

கொழும்பு, ஜன. 28

வரி செலுத்தத் தவறிய பத்து மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமத்தை உடனடியாக இரத்து செய்யக் கோரி சமூக ஆர்வலர்கள் குழுவினால் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

மேலும், கலால் வரி செலுத்த தவறிய மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு ஆண்டு உரிமத்தை புதுப்பிக்கவோ அல்லது புதிய உரிமம் வழங்கவோ கலால் ஆணையருக்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டது. எம்.எம் சஞ்சய் மஹவத்த, சுசந்த ரஞ்சித் லியனாராச்சி உள்ளிட்ட 17 பேர் சட்டத்தரணி மஞ்சுள பாலசூரிய ஊடாக இந்த மனுவை தாக்கல் செய்தனர்.

கலால் ஆணையர் நாயகம் எம்.ஜே. குணசிறி, நிதி அமைச்சின் செயலாளர், நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, அரசாங்க கணக்காய்வாளர் நாயகம், டபிள்யூ.எம். மெண்டிஸ் அன்ட் கம்பெனி, நோர்த் வெஸ்ட் டிஸ்டிலரீஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் 10 மதுபான உற்பத்தி நிறுவனங்கள் பிரதிவாதிகளாக உள்ளன.

அரசின் வருவாயில் பெரும்பகுதியை வரி மூலம் வசூலிக்க அரசு எப்போதும் எதிர்பார்ப்பதாகக் கூறும் மனுதாரர்கள், மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு ஆண்டு உரிமம் வழங்கியதுடன், தாங்கள் கலால் வரி செலுத்த வேண்டியவர்களாக இருப்பதையும் காட்டியுள்ளனர்.

கலால் ஆணையர் மற்றும் அதிகாரிகள் தங்களுக்கு புதிய உரிமம் வழங்கியதையும், ஏற்கனவே உள்ள உரிமங்களை புதுப்பித்ததையும் அறிந்து, எதிர்மனுதாரர் மதுபான உற்பத்தி நிறுவனங்கள் பல ஆண்டுகளாக ஆண்டு வரியை செலுத்தத் தவறியதாக மனுதாரர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# டுபாயில் இருந்து தங்க நகை கடத்திய பெண் சிக்கினார்!

கொழும்பு, ஜன. 28

டுபாயில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட ஒரு கோடியே 37 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளுடன் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தின் வருகை முனையத்தில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

மருதானை பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

குறித்த பெண் வணிக நோக்கத்திற்காக தொடர்ந்தும் வெளிநாடுகளுக்கு சென்று வருகின்றமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# நாரம்மலவில் கோர விபத்து; 2 பெண்கள் உட்பட 3 பேர் பலி!

கொழும்பு, ஜன. 28

நாரம்மல பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இரு பெண்கள் உட்பட மூவர் பலியாகியுள்ளனர். மேலும் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாரம்மல விகாரைக்கு அருகில் உள்ள வளைவு பகுதியிலேயே நேற்று காலை 6.30 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவொன்றும், லொறியும் மோதியதில் ஓட்டோவில் பயணித்த நால்வரில் இரு பெண்கள் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயம் அடைந்துள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

விபத்து தொடர்பில் லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# நுவரெலியா வாவியில் ஆணின் சடலம்

கொழும்பு, ஜன. 28

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் உள்ள கிரகரி வாவியில் நேற்று சனிக்கிழமை காலை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிரகரி வாவியில் படகு சவாரியில் ஈடுபடுவோர் சடலமொன்று மிதப்பதாக பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து குறித்த சடலத்தை மீட்டுள்ளனர்.

அதனையடுத்து, வாவியில் மிதந்த சடலத்தை பார்வையிட்ட பொலிஸார், 64 வயதுடைய இராமன் பத்மநாதன் என்பவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அத்தோடு, நுவரெலியா மாவட்ட நீதிவான் ஸ்தலத்துக்கு சென்று சடலத்தை பார்வையிட்டதையடுத்து, சடலம் வாவியில் இருந்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் வாவியில் பாய்ந்து உயிரிழந்தாரா? அல்லது எவராவது கொலை செய்து வாவியில் எறிந்து விட்டுச் சென்றார்களா என்பது தொடர்பாக பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மரண விசாரணைகளின் பின்னர், சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# சனத் நிஷாந்தவின்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரணமான அதிகார துஷ்பிரயோகத்துக்கும் வன்முறைகளுக்கும் பொறுப்பான அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் தண்டனைப் பயமின்றி சுதந்திரமாக வாழ்கின்ற சமுதாயங்களில் அவர்களுக்கு நேரக்கூடிய அகால மரணங்களை மக்கள் இயற்கை வழங்கிய நீதியாக மனதிற்குள் திருப்தியடைகிறார்கள்.

"வன்முறையும் துஷ்பிரயோகமும் வழமையானதாகும் போது மனித வாழ்வின் பெறுமதி தாழ்ந்து விடுகிறது. சமுதாயம் கொடூரமானதாக மாறும் போது மனிதாபிமானத்தை இழந்து விடுகிறது. இத்தகைய பின்புலத்தில் துஷ்பிரயோகங்களைச் செய்த ஒருவர் மரணமடையும்போது பொதுவெளியில் பிரதிபலிப்புகளும் அதேயளவுக்கு கொடூரமானவையாகவும் மனிதத்தன்மை அற்றவையாகவுமே இருக்கும்.

"மனிதாபிமானப் பண்புடையதும் மற்றவர் மனதை அறிந்து புரிந்துணர்வுடன் நடந்துகொள்ளக்கூடிய ஒழுக்கமுடைய ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமானால், அந்த பண்புகளை முதலில் அரசு வெளிக்காட்ட வேண்டும். சட்டத்தையும் மனித உரிமைகளையும் மதிப்பதுடன் பொறுப்புக்கூறக்கூடியதாகவும் அரசாங்கம் இருக்கவேண்டும். எமக்கு இருப்பதைப் போன்ற அரசு மனித உரிமைகளைக் களங்கப்படுத்தும் போது சமுதாயத்திடமிருந்து நயநாகரிகமான பிரதிபலிப்பை எதிர்பார்க்க முடியாது " - இது மனித உரிமைகள் சட்டவாதி ஒருவர் ருவிட்டரில் செய்த பதிவு.

"கெட்ட மனிதர்களால் நல்லவவர்கள் எப்போதும் துன்பப்படுகிறார்கள். துன்புறுத்தல்களுக்கு உள்ளாகிறார்கள். நல்ல வர்களை விடவும் கெட்டவர்கள் தங்களை சிறந்தவர்களாக நிரூபிக்க செய்யாதது எதுவுமே கிடையாது. கெட்டவர்கள் விரைவில் முன்னேறுகிறார்கள். ஆனால் இறுதியில் எதிர்பாராத ஒன்று நிகழ்ந்து கெட்டவர்கள் தோற்கடிக்கப் படுகிறார்கள். நல்லவர்கள் வெற்றிபெறுகிறார்கள்" என்று இடதுசாரி அரசியல் வாதியான நண்பர் ஒருவர் மார்க்சிம் கார்க்கியை மேற்கோள் காட்டி பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

இவ்வாறாக சமூக ஊடகங்களில் வெளியான பல பதிவுகளை உதாரணமாகக் கூறமுடியும். இடவசதியின்மை கருதி அவற்றை தவிர்க்க வேண்டியிருக்கிறது.

என்னதான் மனிதாபிமானப் பண்புகளைப் பற்றி பேசினாலும், கட்சி அரசியல் வன்மம் நிறைந்த அரசியல் வாழ்வில் மரணங்கள் ஒரு விதமான குரூர திருப்தியுடன் நோக்கப்படுகின்ற கலாசாரம் வளர்ந்திருப்பதை நாம் மறுக்கமுடியாது.

நிசாந்த விபத்தில் பலியான சம்பவத்தைக் கேள்விப்பட்டவுடன் கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன வின் புத்தளம் மாவட்டப் பட்டியலில் அவருக்கு அடுத்ததாக வாக்குகளைப் பெற்றவரின் மனநிலை என்னவாக இருந்திருக்கும் என்பது பற்றி சிந்தித்துப் பாருங்கள். இன்றைய தேர்தல் முறை வேட்பாளர்கள் மத்தியில் இயல்பாகவே வக்கிர உணர்வை ஏற்படுத்துகிறது.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் மரணச் செய்தி வெளியான கையோடு வேட்பாளர் பட்டியலில் அவருக்கு அடுத்தவராக இருப்பவரின் பெயரும் செய்திகளில் வந்துவிடுகிறது. இறுதிச் சடங்கு முடியும் வரையாவது அதைப் பற்றி செய்தி வெளியிடாமல் இருக்கக் கூடிய ஒரு கண்ணியத்தைக் கூட ஊடகப் பரப்பில் காணமுடியவில்லை.

அரசியல் கலாசாரம் எந்தளவுக்கு ஆரோக்கியமற்றதாக இருக்கிறதோ சமூக வாழ்வின் சகல அம்சங்களிலும் அதேயளவுக்கு எதிர்மறையான சிந்தனைப் போக்குகள் வளருகின்றன. மன உணர்வுகளும் அரசியல் நிலைப்பாடுகளையே பொதுவில் பிரதிபலிக்கின்றன. இதன் விளைவாக, போட்டா போட்டி நிறைந்த இன்றைய சமூகவாழ்வில் ஒரு பாரிய தார்மீக வெற்றிடம் காணப்படுகிறது.

முன்னைய காலங்களைப் போன்று சமூக வாழ்வில் இன்று மனிதாபிமானப் பண்புகளைப் பெருமளவுக்கு இல்லாமல் இருப்பதை நாம் ஒவ்வொருவரும் அனுபவ வாயிலாகக் காண்கிறோம்.

மண்ணில் பிறக்கும் ஒவ்வொருவரும் மரணமடையத்தான் வேண்டும். ஆனால், வாழுங்காலத்தில் எமது வாழ்க்கை முறை யின் மூலமாக நாம் எத்தகைய மரபை விட்டுச் செல்லப் போகிறோம் என்பதே முக்கியமானது. ●

## அதிகளவான....

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக புதிய கூட்டணியை உருவாக்குமாறு மக்களுக்கு அறிவிக் கும் பாரிய பேரணியொன்று ஜாஎல நகரில் நேற்று இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா அந்தக் கூட்டணியின் ஸ்தாபக ராக இருப்பதுடன், அதன் செயற்பாட் டுத் தலைவராக பாராளுமன்ற உறுப்பி னர் அனுர பிரியதர்ஷன யாப்பா செயற்பட்டு வருகின்றார்.

இந்த பேரணியில் அமைச்சர் நளீன் பெர்னாண்டோ, அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜயரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## சர்ச்சைக்கு....

அதற்கமைய கட்சியின் பொதுச்செய லாளராக திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் சண்முகம் குகதாசனை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட் டது. அதையடுத்து ஏனைய பதவிகளுக் கும் புதியவர்களின் பெயர்கள் இணக்கத் துடன் தீர்மானிக்கப்பட்டது.

அதையடுத்துப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெற்றது. அதில் மத்திய செயற்குழுவின் பட்டியலை அப்படியே ஏற்பது என்ற பிரேரணையை சி.சிறீதரன் முன்வைத்தார். அது ஏற்றுக்கொள்ளப் பட்டது.

அதன்பின்னர் பிற்பகல் பொதுச் சபை மீண்டும் கூடியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கட்சியின் புதிய பொதுச்செயலாளராக சண்முகம் குகதாசனை நியமித்தமைக்கு எதிராக அவரின் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுச் சபை உறுப்பினர்களே போர்க் கொடி தூக்கினார்கள்.

இதையடுத்துப் பல்வேறு குழப்பங் களுக்கு மத்தியில் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நியமித்த புதிய நிர் வாகக் குழுப் பட்டியலை ஏற்பதா? இல்லையா? என்று பொதுச் சபை உறுப்பினர்கள் மத்தியில் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதன்பிரகாரம் மத்திய செயற்குழு நியமித்த புதிய நிர்வாகக் குழுவுக்கு ஆதரவாக 112 வாக்குகளும், எதிராக 104 வாக்குகளும் கிடைத்தன. அதையடுத் துப் புதிய நிர்வாகக் குழு அங்கீகரிக் கப்பட்டது.

சிவஞானம் சிறீதரன் தலைமையி லான தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வா கத்தில் பொதுச்செயலாளராக ச.குகதா சனும், சிரேஷ்ட உப தலைவராக சீ.வீ. கே.சிவஞானமும், துணைப் பொதுச் செயலாளராக சேவியர் குலநாயகமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இணைப் பொருளாளர்களாக ஞா.ஸ்ரீநேசன், பெ. கனகசபாபதி ஆகியோர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

துணைத் தலைவர்களாக கே.வி.தவ ராசா, சார்ள்ஸ் நிர்மலநாதன், த.கலைய ரசன், பா.அரியநேத்திரன், ப.சத்தியலிங் கம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இணைச் செயலாளர்களாக திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, ரஞ்சினி கனக ராசா, த.குருகுலராஜா, ஈ.சரவணபவன், இரா.சாணக்கியன், சி.சிவமோகன் ஆகி யோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செயற்குழு உறுப்பினர்களாக எம்.ஏ. சுமந்திரன், கருணாநிதி, பரஞ்சோதி, சயந்தன், ரவிகரன், இரட்ணவடிவேல், யோகேஸ்வரன், கோடீஸ்வரன், கனகசிங் கம், ஜெயக்குமார் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

எனினும், தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் நேற்று மாலை நிறைவடைந்த பின்னர் இன்று நடை பெறவிருந்த கட்சியின் தேசிய மாநாட் டைக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா திடீரென ஒத்திவைத்துள் ளார். கட்சியின் புதிய தலைவர் உள் ளிட்ட புதிய நிர்வாகக் குழுவினர் இன்று நடைபெறவிருந்த மாநாட்டில் அறி முகம் செய்யப்படவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பெட்டகம்....

ரகுராம், வேலன் சுவாமிகள் ஆகியோர் இணைந்து திரை நீக்கம் செய்துவைத்தனர். தொடர்ந்து பெட்ட கம் ஆணவ சேகரிப்பு நிலையத்தில் மரங்கள் நாட்டப்பட்டன.

மரங்களை கலைத்துறை பீடாதிபதி எஸ். ரகுராம், வேலன் சுவாமிகள், குப்பி ளான் பிரதேசத்தை சேர்ந்த பெண்மணி ஒருவரும் நாட்டிவைத்தனர்.

தலைமை உரையினை நிகழ்வின் தலைவரும் பொருளியல் ஆய்வாளரு மான செல்வின் நிகழ்த்தினார். கருத் துரைகளை சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் இயக்குநரும், சட்டத் தரணியும், யாழ்ப்பாண பல்கலைக்கழக வருகை விரிவுரையாளருமான அரசியல் ஆய்வாளர் சி.அ.ஜோதிலிங்கம், நிகழ் வின் பிரதம விருந்தினரும் யாழ். பல்க லைக்கழக கலைத்துறை பீடாதிபதி யுமான பேராசிரியர் எஸ்.ரகுராம், யாழ் பல்கலைக் கழக அரசறிவியல் துறை தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங் கம், அரசியல் சமூக ஆய்வாளர் நிலாந் தன், சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரா ஜேஸ்கண்ணா, சைவ சித்தாந்த துறை சிரேஸ்ர விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரன், கலாநிதி சிதம்பர நாதன், ஓய்வு பெற்ற கிராம சேவையா ளர் சோ.பரந்தாமன் ஆகியோர் நிகழ்த் தினர். (அ-2)

## சுதந்திர....

தெரிவித்து மட்டக்களப்பில் நேற்று ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் சுகந்தி,அம்பாறை மாவட்ட தலைவி த.செல்வராணி, திரு கோணமலை மாவட்ட தலைவி செபஸ் டியான் தேவி ஆகியோர் இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துகளை முன்வைத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்,

எதிர்வரும் நான்காம் திகதி இலங்கை யின் சுதந்திர தினம் ஆனால் அன்று எங் களுக்கு கறுப்பு தினம். வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட அதாவது கறுப்பு தினமா கிய சுதந்திர தின நாளில் 8 மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவி னர்கள் சேர்ந்து மட்டக்களப்பு கல்லடி பாலம் தொடக்கம் காந்தி பூங்கா வரை அமைதி வழியான போராட்டம் ஒன்றை நடாத்தவுள் ளோம். இந்தப் போராட்ட மானது வடக்கிலும் இடம்பெறவுள்ளது.

உண்மையில் இன்று சுதந்திர தினம் என்று கூறுகின்றார்கள் எங்கே சுதந்திர தினம் கதைக்க கூட சுதந்திரம் அற்ற சுதந் திர தினம் இந்த இலங்கையில் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. சுதந்திர தினம் என்று சொன்னால் இலங்கை சுதந் திரம் அடைந்த அக்காலம் தொட்டு இன்று வரை தமிழர்களுக்கு சுதந்திரம் இல்லை.

இன்று தமிழர்களாகிய நாங்கள் எங் களது வாயால் வரும் வார்த்தைகளை கூட வெளியில் சொல்ல முடியாத அளவு சுதந்திரம் இல்லை சுதந்திரமற்ற இலங்கை நாட்டில் சுதந்திர தினம் எதற்கு?

இன்று 14 வருடங்களாக எங்களது போராட்டங்களை தொடர்ந்து எடுத்துச் சென்று கொண்டிருக்கின்றோம். எத் தனை ஜனாதிபதிகள் மாறி மாறி வந்தா லும் எத்தனை பிரதமர்கள் மாறி மாறி வந்தாலும் எங்களுக்கான சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை. நாங்கள் தொலைத்து விட்டு தேடிக் கொண்டி ருப்பது எமது உயிர்களை. ஒவ்வொரு உயிர்களையும் தொலைத்து விட்டு வீதியில் நின்று 220 க்கு மேற்பட்ட தாய் மார்களை இன்று இழந்து நிற்கின்றோம்.

எதிர்வரும் நான்காம் திகதி நடக்க இருக்கும் சுதந்திர தினத்தை எதிர்க்கும் இந்த போராட்டத்தில் அனைத்து கடைகளும் மூடப்பட வேண்டும். மூன்று இன மக்களும் சேர்ந்து இந்த கடையடைப்பினை செய்து அன்று நடைபெறும் அந்த நிகழ்வில் அனை வரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்-என்றனர். (அ)

# சிறிய குளங்களை புனரமைக்க 1,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஜன. 28

நாட்டில் உள்ள சிறிய குளங் கள் மற்றும் ஏரிகளை புனர மைப்பதற்காக அரசாங்கம் 1,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

நாட்டில் உள்ள 17,000 சிறிய நீர்ப்பா சன முறைமைகளை புனரமைப்பதற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக இந்த ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

2023ஆம் ஆண்டில் ஒதுக் கப்பட்ட 1,000 மில்லியன் ரூபாய் மூலம் இந்த சீரமைப்பு பணிகள் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டன.

விவசாய திணைக்களத்தின் பூரண மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப் பட்ட சுமார் 1,100 குளங்களின் நிர்மா ணப் பணிகள் தற்போது நிறைவடைந் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிகழ்நிலை....

நிவர்த்தி செய்ய சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் அவர் கூறியுள் ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம் உறுதிப்படுத்திய பின்னர் பாராளுமன்ற அதிகாரிகள் குழுவினால் அதனை மீள் பரிசீலனைக்கு உட்படுத்துவதாக சபா நாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறைகளின் பின்னர் தம்மிடம் சமர்பிக்கப்படும் சட்டமூலத் தில் கையொப்பமிட்டு சான்றுப்படுத்து வதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## அதிவேக....

இடம்பெற்றது.

விபத்து காரணமாக மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் வாகனங்களுக்கான போக்குவரத்து தடைப்பட்டது.

இதனால், கொழும்பு நோக்கி பய ணிக்கும் வாகனங்கள், கொடகமையில் வெளியேறி கொக்மாதுவ ஊடாக அதிவேக நெடுஞ்சாலைக்குள் மீண்டும் நுழையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒப்பந்த....

விசாரணையில் தெரியவந்துள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

குறித்த இராணுவ உத்தியோகத்தர் கள் தமது கடமை நேரத்தின் போது முகாமிலிருந்து வெளியேறி தமது கடமை ஆயுதங்களைப் பயன்படுத்தி மக் களைக் கொன்றுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது ஒரு தீவிரமான நிலை என்றும், இந்தச் செயல்களை தடுக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என் றால், இது ஆபத்தான போக்காக மாற வாய்ப்புள்ளது என்றும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த குற்றச்செயல்களில் ஈடுபட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களில் சிலர் போதைப்பொருள் பாவனைக்கு அடி மையானவர்கள் எனவும், மேலும் சிலர் கடும் நிதி நெருக்கடியில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒப்பந்தம் மூலம் கொலை களை செய்த பாதுகாப்பு படையினர் பலர் அண்மையில் கைது செய்யப்பட்ட தாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் அண்மையில் அம்பலாங்கொடை பிரதேசத்தில் மீன் வியாபாரி ஒருவரைக் கொல்லச் சென்ற வேளையில் பொலிஸாரால் கைதுசெய் யப்பட்டதுடன், அதற்காகவே அவர்கள் ஆயுதம் ஏந்தியிருந்ததும் தெரியவந் துள்ளது.

எவ்வாறாயினும், இவ்வாறான செயற் பாடுகளில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினர் குற்றச் செயல்கள் இடம் பெற்ற போது கடமையில் இருந்தமை யால் அவர்களைக் கைது செய்வது மிக வும் சிரமமாக இருந்ததாக பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். (அ)

## ஈஸ்டர் தாக்குதலுக்கு....

இருந்து நாட்டை விடுவித்து, நாட்டைப் பாதுகாப்பதே எனது நோக்கமாக இருந் தது.

அதற்காகவே நீதித்துறையை தொடங்கினோம் இதை நீண்ட நாட்க ளாக ஆய்வு செய்து தேவையான திட்டங் களை தயாரித்தோம். அதன்படி கடந்த டிசம்பர் மாதம் தென் மாகாணத் தில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

அதன் பின்னர், நாட்டில் பல போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் குற்றவாளிகள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அவர்களில் சிலர் மறைந்துள்ளனர் இவர்களில் சிலர் எம்மிடையே உள்ள னர். நாட்டில் போதைப்பொருள் மற் றும் பாதாள உலகத்தை ஜூன் 30ஆம் திகதிக்குள் முழுமையாக ஒடுக்கும் இலக்கை பொலிஸாருக்கு வழங்கியுள் ளோம். யார் தலையிட்டாலும் இந்த நடவடிக்கை நிறுத்தப்படாது.

மக்கள் எந்த அச்சமும் சந்தேகமும் இன்றி தங்கள் பகுதிகளின் தகவல்களை எங்களுக்குத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தேவையான மேலதிக நடவடிக் கைகளை மேற்கொள்வதற்காக செயற் பட்டு வருகின்றோம். இந்த ஆபத்தை ஒழிக்க அனைவரும் தங்கள் உயிரை பணயம் வைக்க வேண்டும் அல்லது ஒன்றுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், சாலை பாது காப்பு சட்டத்தை முன்வைத்தோம். சமூக ஊட கங்கள் மூலம் பெண்கள் மற்றும் குழந் தைகள் மீதான அடக்குமுறையை தடுப் பதே இதன் முதன்மை நோக்கமாகும்.

சமூக ஊடகங்கள் மூலம் பல வகை யான பண மோசடிகள் பதிவாகி வரு கின்றன. அவற்றினை தடுப்பது மற் றொரு நோக்கம். ஆனால் பலர் இதைப் பற்றி தவறான புரிதலுடன் எங்களை விமர்சிக்கிறார்கள். இவர்களில் பலருக்கு போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பணத்தை செலவிடுகின்றனர்.

எத்தனை அவமானங்கள் செய்தா லும், தொடங்கிய பணி முடியும் வரை நிறுத்த மாட்டோம்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான எங்கள் அறிக்கைகளையும் பேராயர் விமர்சித்துள்ளார். ஆனால் அனைத்து கத்தோலிக்கர்களுக்கும் நீதி வேண்டும்.

பேராயர்களும், கத்தோலிக்க திருச் சபையும் இதற்கு ஆதரவு தருமாறு கேட் டுக்கொள்கிறேன். எங்களிடம் இல்லாத தகவல் ஏதேனும் இருந்தால், அதை எங்களிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அந்த விசாரணைகளின் முடிவில், குற்றவாளிகள் யாராக இருந்தாலும், தரம் பாராமல் அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என்று கிறிஸ்தவ சமுதா யத்திற்கு உறுதியளிக்கிறேன்.

இந்த இலக்குகள் அடையப்பட்டால், தற்போதுள்ள நாட்டை விட சிறந்த நாட்டை உருவாக்க முடியும் என்று நான் நம்புகிறேன் - என்றார்.

விசேட செயலமர்விலே பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் உட் பட சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதி பர்கள், சமூக பொலிஸ் குழு உறுப்பினர் கள் மற்றும் பெருந்தொகையான மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# சனத் நிஷாந்தவின் சாரதியின் கைபேசியை கைப்பற்றிய சி.ஐ.டி.

## விபத்துக்கு முன் சமூக வலைத் தளத்தில் வெளியிட்ட பதிவே இதற்குக் காரணம்

கொழும்பு, ஜன. 28

ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் உயிரிழக்கக் காரணமான கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் நடந்த வாகன விபத்து தொடர்பில், அந்த வாகனத்தை ஓட்டிய சாரதியின் செல்போனை குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகள் தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளனர்.

விபத்து சம்பந்தமாக நடத்தும் விசாரணைகளுக்காக விசேட பொலிஸ் குழு செல்போனை தமது பொறுப்பில் எடுத்துள்ளது.

சம்பந்தப்பட்ட சாரதி ஏற்கனவே எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சாரதி விபத்து நடப்பதற்கு முன்தினம் தனது மரணம் சம்பந்தமாக சமூக வலைத்தளத்தில் இட்டிருந்த பதிவு காரணமாக அவரது தொலைபேசியை பொலிஸார், கைப் பற்றியுள்ளனர்.

பொலிஸ் பாதுகாப்பின் கீழ் ராகம வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்றுவரும் சாரதியிடம் குற்றவியல் விசா ரணை திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலத்தையும் பதிவு செய்துள்ளனர்.

குறித்த சாரதி சமூக வலைத்தளத்தில் இட்டிருந்த பதிவு சம்பந்தமாக குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். (அ)

# பயங்கரவாதிகளைப் போன்று செயல்படும் அரச அதிகாரிகள்

## ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 28

நாட்டின் ஜனாதிபதி தலைமையிலான அமைச் சரவை எடுக்கும் முடிவுகளை அரச அதிகாரிகள் நடை முறைப்படுத்தாது, நாட்டை நெருக்கடிக்குள் தள்ளி மக்களை சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உள் ளாகி வருவதன் மூலம் அரச அதிகாரிகளின் பயங்கர வாதம் தெளிவாகியுள்ளதாக முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் 17 லட்சம் அரச அதிகாரிகள் இருக் கின்றனர். இந்தளவு பாரிய அரச சேவை நாட்டுக்கு தேவையா?.

அரச அதிகாரிகளின் சம்பளம்,கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகளுக்காக நாட்டில் வாழும் அனைவரும் பெருந்தொகையை செலுத்த வேண்டியுள்ளது.

அரச சேவையில் உள்ள சிலர் தமது கடமையை சரியாக செய்கின்றனர். எனினும் பெரும்பாலான அரச அதிகாரிகள், சம்பளம், கொடுப்பனவுகள், சிறப்புரிமை கள் மற்றும் வசதிகளை பெற்றுக்கொண்டு எந்த வேலை களையும் செய்யாமல் இருக்கின்றனர்.

அரச அதிகாரிகளுக்கு பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் தமது பொறுப்பை நிறைவேற்றுகிறார்களா?.

உதாரணமாக தொழில்சார் நிபுணர்கள் நாட்டில் இருந்து வெளியேறுதை தடுக்க மருத்துவர்கள், பல்க லைக்கழக சமூகத்தின் சம்பளத்தையும் கொடுப்பன வையும் அதிகரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவை தூரநோக்கு கொண்ட தீர்மானம் ஒன்றை எடுத்தது. எனினும் அரச அதிகாரி கள் அந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாது காலை பிடித்து இழுக்கின்றனர்.

உண்மையில், அரச அதிகாரிகளின் இந்த தன்னிச்சை யான செயற்பாடுகள் குறித்து நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# கொழும்பில் சுதந்திர தினத்தை கொண்டாட பிரமாண்ட ஏற்பாடு

## ரணிலின் முடிவால் ஆளுங்கட்சி கவலை

கொழும்பு, ஜன. 28

**இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் எதிர் வரும் பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை கொண்டாடப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து வருகிறது.**

சுதந்திர தினக் கொண்டாட்டங் களை கருத்திற் கொண்டு போக்கு வரத்துத் திட்டங்களை இலங்கை பொலிஸார் அறிவித்துள்ள னர்.

இதன்படி, காலி முகத்திடல் வீதி, கொள்ளுப்பிட்டி சந்தியிலி ருந்து காலி முகத்திடல் வரையி லான வீதி, செரமிக் சந்தியிலிருந்து காலி முகத்திடல் வரையிலான வீதிகள் மூடப்படும்.

ஜனவரி 29 முதல் பெப்ரவரி 02 ஆம் திகதிவரை காலை 6.00 மணி முதல் 8.30 மணி வரையும், முற் பகல் 11.00 மணி முதல் பகல் 12.30 மணி வரையும் வீதிகள் ஒத்திகை நடவடிக்கைக்காக மூடப் படும்.

பெப்ரவரி 03 ஆம் திகதி பிற் பகல் 2.00 மணி தொடக்கம் பெப்ரவரி 04 ஆம் திகதி சுதந்திர தின விழா நிறைவடையும் வரை வீதிகள் இந்த வீதிகள் மீண்டும் மூடப்படும்.

சுதந்திர தின நிகழ்வில் ஜனாதி பதிகள் உரையாற்றுவது மரபாக இருந்துவந்தது. ஆனால், ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஆண்டு சுதந்திர தின உரையை தவிர்த்திருந்ததுடன், இம்முறையும் அதனை தவிர்க்க உள்ளதாக ஆளுங் கட்சி வட்டாரங்களில் அறிய முடிகிறது.

இதனால் ஆளுங்கட்சியின் உறுப்பினர்கள் கவலையடைந்துள் ளனர். பாராளுமன்ற கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ள தால் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்ப மாக உள்ள புதிய கூட்டத்தொட ரில் ஜனாதிபதி தமது கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்த உள் ளார். (அ)

# பொய்யான செய்திகளை வெளியிடுவோரை சிறப்புரிமைக் குழுவுக்கு அழைக்க முடியுமா?

## சபாநாயகருடன் கலந்துரையாட தயாராகும் பெரமுன

கொழும்பு, ஜன. 28

கட்சியின் நடவடிக்கைகள் சம்பந்தமாக பொய்யான செய்தி களை வெளியிடும் நபர்களை பாராளுமன்ற சிறப்புரிமை குழுவு க்கு அழைக்க முடியுமா என்பதை அறிந்துக்கொள்ள பொதுஜன பெர முனவின் பாராளுமன்ற உறுப்பி னர்கள் குழு, சபாநாயகருடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தமாக பொய்யான செய்திகள் வெளியாகியதாகவும் அவற்றை வெளியிட்டவர்களுக்கு எதிராக எவ் வித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாமல் போனதன் காரணமாக பாராளுமன்ற உறுப் பினர்கள் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனும் இது குறித்து கலந்துரையாடப்பட் டுள்ளது.

இந்த வருடம் தேர்தல் வருடம் என்பதால், கட்சி மீது சுமத்தப்படும் பொய்யான குற்றச்சாட்டுக்கள், கட்சியின் தேர்தல் பிரசாரங்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என சுட்டிக்காட்டியுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள்,இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ள னர்.

இதனடிப்படையில், பொய் யான செய்திகளை பரப்புவோரை பாராளுமன்ற சிறப்புரிமை குழு வுக்கு அழைக்க முடியுமா என்பது குறித்து சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கலந்துரையாட அவர்கள் தீர்மானித்துள்ளனர். (அ)

# பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் புதிய கூட்டணியின் முதல் பொதுக்கூட்டம்



கொழும்பு, ஜன. 28

"வலுவான பொருளாதாரம் - வெற்றிகரமான பயணம்" எனும் தொனிப்பொருளில் புதிய அரசியல் கூட்டணியின் முதலாவது மக்கள் கூட்டம் நேற்று சனிக்கிழமை மாலை ஜாஎல நகரில் இடம் பெற் றது. பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்ப மான புதிய கூட்டணியின் அறிமுக பொதுக்கூட்டத்தில் பெருந்திர ளான மக்கள் கலந்து கொண்டனர்.

புதிய அரசியல் கூட்டணியின் செயற்பாட்டுத் தலைவர் அநுர பிரியதர்சன யாப்பா, நிறுவுனர் நிமல் லான்சா, அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த, புதிய கூட்டணி யின் கம்பஹா மாவட்டத் தலை வர் நளின் பெர்னாண்டோ, ஜே. வி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிபால அமரசிங்க, நீர்கொழும்பு முன்னாள் மேயர் தயான் லான்சா, உள்ளிட்ட பல வேறு முக்கியஸ்தர்கள் இந்நிகழ் வில் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் மதத் தலைவர்கள், தொழிற்சங்க தலைவர்கள், சிவில் அமைப்புக் களின் பிரதிநிதிகள், கலைஞர்கள், சட்டத்தரணிகள், தொழில் வல்லுனர்கள் உட்பட பெருந் தொகையான ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பி டத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உறக்கம் முக்கியம்

முனைவர் என்.மாதவன்

மனிதர்களின் வாழ்விலிருந்து பிரிக்க இயலாதது உறக்கம். வாழ்வில் மூன்றில் ஒரு பகுதியை நாம் அனைவரும் உறங்கியே செலவிடுகிறோம். உறக்கமில்லாத இரவின் அடுத்த நாள் பகல் வேளை பலருக்கும் அவ்வளவு சிறப்பானதாக அமைவதில்லை.

ஒவ்வொரு நாள் உறங்கும்போதும் நமது உடல் அந்நாளில் பெற்ற களைப்பை நீக்கிக் கொள்வதோடு அடுத்த நாள் உழைப்பதற்கான புத்துணர்ச்சியையும் உண்டாக்கிக் கொள்கிறது. அந்த வகையில் உறக்கம் என்பது நேரத்தை வீணாக்கும் செயல்பாடல்லமாறாக ஒருவகையான முதலீடு என்கின்றனர் அறிஞர்கள்.

ஒரு நாளின் அட்டவணையில் மற்ற செயல்பாடுகளுக்கு நேரம் ஒதுக்குவதைப் போன்று தூக்கத்திற்கும் கணிசமான நேரம் ஒதுக்கவேண்டும். மூன்று முதல் ஐந்து வயது வரையுள்ள குழந்தைகள் 10 மணி நேரம் முதல் 13 மணி நேரம் வரையிலும், ஆறு முதல் 12 வயது வரையுள்ள குழந்தைகள் ஒன்பது மணி நேரம் முதல் 12 மணி நேரம் வரையிலும்,13 முதல் 18 வயது வரையிலான இளையோர் எட்டு முதல் 10 மணி நேரம் வரையிலும், மூத்தோர் சுமார் ஏழு மணி நேரம் வரையிலும் என ஒவ்வொருவரும் தூங்க வேண்டிய நேரம் பரிந்துரைக்கப்படுகின்றது.

இவ்வாறு ஒதுக்க இயலாமல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக உறங்குவோரின் பணித்திறன் சொல்லிக் கொள்ளும் வகையில் இருக்காது. உறக்கமும் மூளையின் செயல்பாடும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையதாய் இருப்பதே இதற்கு காரணம் ஆகும்.







பகல் நேரத்தில் செயல்படத் தொடங் கிய மூளையின் பல்வகை செல்களும் ஓய்வெடுக்க அனுமதிக்கவேண்டும். உறங்கும் முன்னர் வீட்டின் விளக்குகளை அணைப்பது போன்ற செயல்பாடு இது. விளக்குகள் அணைந்த பின்னரும் காற்றோட்டத்திற்காக மின்விசிறி எப்படி ஓடிக்கொண்டிருக்கிறதோ அவ்வாறே ஓய்வெடுக்கும் நிலையிலும் மூளை உடலின் பல்வேறு செயல்பாடுகளுக்காக விழிப்புடனேயே இருக்கும். தூக்கமின்மையால் மூளை தொடர்ந்து கடும் பணியாற்றி சோர்வுறும் நிலையில் மறதி நோய் ஏற்படும் ஆபத்து உண்டு.

சிலருக்கு மதிய உணவிற்குப் பின் உறக்கம் வரலாம். அதிக அளவிலான உணவு நமது இரைப்பையை அடையும்போது அங்கிருக்கும் உறுப்புகள் அதிகம் பணியாற்ற வேண்டியிருக்கிறது. இதனால் ஏற்படும் ரத்த ஓட்ட சமநிலை பாதிப்பால் இது ஏற்படுகிறது. அளவோடு உண்டால் இதனைத் தவிர்க்கலாம். இவ்வாறு பிற்பகலில் வரும் உறக்கம் சிறிது நேர உறக்கமாக இருந்தால் நல்லது. இதனால் கிடைக்கும் புத்துணர்வு அந்நாளின் பின்பகுதியில் பணித்திறனைக் கூட்ட உதவும்.

உறக்கம் அனைவருக்கும் பொதுவானதுதான் என்றாலும் ஒவ்வொருவரின் பணிச்சூழல், பொருளாதார சூழலுக்கேற்ப உறங்கும் நேரமும் அமைந்து விடுகிறது,

பொதுவாக, பகல் நேரம் பணிக்குச் சென்று வருவோர்க்கு இரவில் தூங்க வாய்ப்பு கிடைக்கும். ஆனால் பத்திரிகை, காட்சி ஊடகம், தொழிற்சாலை, மருத்துவமனை, போக்குவரத்து போன்ற பணிகளில் ஈடுபடுவோர்க்கு இரவில் ஒரே சீராக உறங்க வாய்ப்பு கிடைப்பதில்லை.

அவ்வாறான பணியில் இருப்போர் சீரான உயிரியல் லயத்திற்குத் தம்மை ஆட்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்வாறான பணிகளில் ஈடுபடும் தொழிலாளர் நலன் காக்கும் விதமாக கூடுதல் விடுமுறை, ஓய்வு போன்றவை அளிக்கப்படவேண்டும்.

இன்றைய சூழலிலும் உறங்கும் நேரத்தில் பாலின வேறுபாடு காணப்படுவது கண்கூடு. வீட்டின் வேலைகள் பகிர்ந்து செய்யப்படும் குடும்பங்களில் அத்தகைய பாலின வேறுபாடு இராது. அதாவது குடும்பத்திலுள்ள அனைவரும் ஒரே நேரத்தில் உறங்கச் செல்ல வேண்டுமானால் இரவில் வீட்டின் பணிகளைப் பகிர்ந்து செய்யத் தயாராக வேண்டும்.

கூடுதல் பணி இருக்கும் நாட்களில் கூடுதல் பணிப் பகிர்விற்கான திட்டமிடுதலும் தேவை. மறுநாள் காலை செய்தே தீரவேண்டிய ஒரு சில பணிகளை முதல் நாள் மாலையே செய்து வைப்பது, அடுத்த நாளைப் பதற்றமின்றித் தொடங்க உதவும். புதினா, கீரை போன்றவற்றை ஆய்ந்து வைத்தல், சாப்பாடு எடுத்துச் செல்லும் பாத்திரங்களை நன்கு துலக்கி வைத்தல் போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம். இவ்வாறான தயாரிப்பு பதற்றமின்றி தூங்கி மறுநாள் காலை பதற்றமின்றி எழ உதவும்.

மனிதர்களுக்கு உறக்கம் இயல்பாக வருவதுதான் என்றாலும் உறக்கத்திற்கான தயாரிப்பு மிகவும் அவசியம். தொலைக்காட்சி, கைப்பேசி போன்றவற்றிலிருந்து விடுபட்டு இயல்பு நிலையில் நாம் இருந்தால், நமது கண்களால் விரைவில் உறக்கத்தை மேற்கொள்ள இயலும்.

எனவே குறைந்தபட்சம் உறங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்பாகவாவது தொலைக்காட்சி பார்ப்பதையும், கைப்பேசியில் பேசுவதையும் கட்டாயம் நாம் தவிர்க்க வேண்டும். நிம்மதியான உறக்கத்திற்கு, இருட்டான அறை, கொசுக்கள் இல்லாத தூய்மையான படுக்கை, தூய்மை செய்யப்பட்ட போர்வை, தலையணை போன்றவை கூடுதல் உதவி செய்யக்கூடியவை.

உடல்நலனுக்கு இன்றியமையாத் தேவையான உறக்கத்தை முறையாகக் கடைப்பிடித்து உடலை சிறப்பாகப் பராமரிப்போர் வெகு சிலரே. வயது ஆக ஆக சிலர் தூக்கமின்மை நோய்க்கு ஆட்படுகின்றனர். இதனால் நாள்தோறும் இயற்கையாக வரவேண்டிய உறக்கம் இவர்களுக்கு வருவதில்லை.

இதனால் மாத்திரை, மருந்துகளை உட்கொண்டு உறக்கத்தை செயற்கையாக வரவழைக்கத் தொடங்குகின்றனர். ஒரு குறிப்பிட்ட காலம் சிறப்பாகப் பணியாற்றும் இந்த மருந்துகள், காலம் ஆக ஆக அதிக அளவிலான தேவையை ஏற்படுத்துகின்றன.

பின்னர் செயல்பட இயலாத தன்மைக்கும் இட்டுச் செல்கின்றன. தேவைக்காக எவ்வாறு எவ்வித சலிப்புமில்லாமல் பணத்தை ஈட்டுகிறோமோ அதுபோலவே நல்ல உடல்நலனை பராமரிக்கவும் நாம் முயலவேண்டும். குறிப்பிட்ட அளவிலான நேரத்தை, உடற்பயிற்சி, நடைபயிற்சி போன்றவற்றிற்கு ஒதுக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக நம் குடும்பத்தாருடனும் நமக்கு அருகில் வசிப்பவர்களுடனும் ஆரோக்கியமான உறவைப் பேண வேண்டும். எந்த நிலையிலும் எளிமையாக வாழ வேண்டும். எளிமையைக் கைகொள்வோர்க்கு வாழ்வே எளிதாகும்.





